1404

gistered. No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion,

Science, Art and Civilization.

தொகுதி 8 } 1917-௵ ஜூன் ௴ / பிங்கள ௵ ஆனி ௴ { பகுதி 2

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அட்டவணை

(CONTENTS)

		பக்கம்
1.	பத்திராதிபர் பக்கம்—Editor's page	41
2.	தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி.ஏ. Current events—R. Rangaswamy Iyer. B. A.	42
3.	பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர் Elements of Theosophy—V. Venkusamy Iyer	49
4.	நக்ஷத்திரப்பிரகாசம்—பி. எஸ். ராமசுப்பையர் Starlight—B. S. Ramasubbier	53
5.	பகவத் பக்தியும் தேஜஸாம்—ஏ. நஞ்சுண்டப்பா Devotion to God and Aura—A. Nanjundappa	62
6.	மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.	65
7.	பக்தி—சுப்பிரமண்ய சாஸ்திரி Devotion—Subramania Sastry.	71
8.	சமாசாரம் News	77
9.	பத்திரிகை வரவு Journals reviewed	78
10.	புத்தகவரவு—Review of Books	80

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வராதது பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ சன்கார்டியா ஹாலில் ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம் ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூன் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்,

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

பூர்ணசந்திரோதய அநுபந்தம்.

அழைப்புப் பத்திரம்.

பாண்டிய நாட்டு பிரஹ்மக்ஞான ஸபைக் கான்பரன்ஸின் 11-ஆம் கூட்டம் காளிது 1917ளு ஜூன்மீ 21,22,23-ஆம் தேதிகளில் (வியாழன், வெள்ளி, சனி) ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸரவர்கள், கனம் திவான் பஹதூர் ஜஸ்டிஸ் ஸதாசிவ ஐயரவர்கள் இவ்விருவர் அக்ராஸனத்தின் கீழ் நடைபெறும். ரிடையர்ட் ஸப்ஜட்ஜ் ஸ்ரீமான் டி. ராமசந்திர ராவ் (பிரஹ்மக்ஞான ஸபை ஜெனரல் செக்ரிடரி) அவர்களும், ரிடையர்ட் ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. கே. தேசிகாசார்யர் (பிரஹ்மக்ஞான ஸபையின் மதராஸ் ராஜதானி செக்ரிடரி) அவர்களும், ஸ்ரீமதி டோரதிஜினராஜதாஸரவர்களும் மற்றும் பல பெரியோர்களும் வித்வான்களும் ஆங்கிலததிலும, தமிழிலும், தெலுங்கிலும் பிரஹ்மக்ஞான விஷயமாகவும், மத விஷயமாகவம், கல்வி விஷயமாகவும், பொது ஜன முன்னேற்ற விஷயமாகவும் உபந்யசிப்பார்கள். நிழற்பட காட்சியும், திருவனந்தபுரம் ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், யம். ஏ. அவர்களால் ஹரிகதையும் நடக்கும்.

அச்சமயம் தாங்கள் வந்திருந்து சபையை நடத்துவிக்கவேண்டுகிறோம்.

வி. ராமசந்திர ஐயர், பி. ஏ. பி. எல்., F. T. S.
பிரசிடெண்ட்.
பாண்டிய நாட்டு பிரஹ்மக்ஞான சபைக் கான்பரன்ஸ்.

கே. சோமசுந்தர ஐயர் பி. ஏ. பி. எல்., F. T. S.
கார்யதரிசி.
பாண்டிய நாட்டு பிரஹ்மக்ஞான சபைக் கான்பரன்ஸ்.

அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல்., F. T. S.
பிரஸிடெண்ட், மதுரை பிரஹ்மக்ஞானக் கிளைச்சபை.

சின்ன வெங்கடஸாமி ராஜா F. T. S.
கார்யதரிசி, ராஜபாளையம் பிரஹ்மக்ஞானக் கிளைச் சபை.

குறிப்பு:—ராஜபாளையம் தென்னிந்தியா ரயில்வே சாத்தூர் ஸ்டேஷனுக்கு 30 மைலுக்கருகே யுள்ளது. சாத்தூரிலிருந்து, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மோட்டார் வண்டிகள் போகின்றன. குதிரை வண்டிகளும் மாட்டு வண்டிகளும், ராஜபாளையத்திற்குப்போக, ஸ்ரீவில்லிபுத்தூரில் கிடைக்கும். ராஜபாளையத்து நண்பர்கள் சாத்தூரிலும் மற்ற இடங்களிலும் உபசரித்து அழைத்துப் போகக் காத்திருப்பார்கள். விஷய அட்டவணைக் காப்பிகள் மதுரையிலும், சாத்தூரிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், ராஜ பாளையத்திலும் கிடைக்கும்.

விக்டோரியா பிரஸ், மதுரை—1917.

விளம்பரம்

உதாஸிந ஸாது ஸ்தோத்திரம்:—(பீ. ஆர். சுந்தரராஜ ஐயர் இது ஓர் அருமையான ஸமஸ்கிருத நூல். தேவதீர்த்தர் என்ற ஓர் யதியால் இயற்றப்பெற்றது. இது பாம்பின் நடை யெனப் பொருள் தரும் புஜங்கப் பிரயாதமாகிய சந்தத்தில் இன்னிசையான பதங்களால் இசைக்கப்பட்டது. உலகின் கண்ணுவள எல்லாவற்றுள்ளும் ஈசுவர விளக்கம் அதிகமாயுள்ள மஹான்களைப்பற்றிய துதியாம் இச்சுலோகங்கள் நிகழ்கின்றன. இதில் மஹான்களுடைய லக்ஷணங்களைப்பற்றி விவரங்களே மூளன. தமிழ் மொழிபெயர்ப்பு, குறிப்புரைகளோடு வெளியிடப்பட்டது. இதன் விலை 6 அணு

த்யானக்கிரம விஷயம்:—(கே. எஸ். ராமச்சந்திரய்யர்) தியானத்தின் பிரயோஜனமென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவனவன் தினசரி நடபடிகைகளில் ஸத்யத்தையும, தர்மத்தையும் சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப்பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குதலேயாம். அதற்கு இதுவாக "ஸத்குரு சரணங்களில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் அப்பியசிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் நமது அனுஷ்டானத்தை நேர்மைப்படுத்தக்கூடிய ஓரோர் நற்சிந்தனையாகவும் வகுக்கப்பட்டு, தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிரசுரமாகி யிருக்கின்றன. எல்லோரும் வாங்கிப்படித்து தியானித்து நற்பயன் பெறுமாறு விலை சொற்பமாக 4-அணு வீதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரஹ்மஞான மந்திரம் மதுரை

உ

சோதிட விளம்பரம்.

பலதீபிகை :—சோதிடம் பயில இதுவே சிறந்த வழி காட்டி காலபுருஷ அங்கம்முதல் லத்தா பலன் வரை விரிவாய் எடுத்துரைக்க வல்லது. 26 அத்தியாயங்கள் அடங்கிய 236 பக்கங்கள் கொண்டது.

காலிகோ பைண்ட் ரூ 1—8—0
ராப்பர் ,, ரூ 1—4—0

சோதிட கணிதம்:—சுதேச விராசிமானம் கிரக லக்கின புஸ்தகங்கள் ஆம் இவைகளை நன்கறியும் ஆற்றல் விளக்க வல்லது.

ராப்பர் பைண்ட் ரூ 0—6—0

புட்பபந்தம்:— மழைவளம் உண்மை யின்மையும் கூறி இவ்வகைப்பயிர் லாபம உண்டெனவுங் கூற வல்லது.

ராப்பர் பைண்ட் ரூ 0—4—0

இப்புத்தகங்களுக்கு வி. பி. செலவு பிரத்தியேகம்.

சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி
1, ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப்பேட்டை.

1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும்,

பார்சல்கள் வாங்கும்பொழுது அடியிற்கண்ட விலாசம் சரியாக யிருக்கப்பட்ட லேபிலைப் பார்த்து வாங்குங்கள். உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி முறப்பா கவர்மெண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா, கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோ
கிக்கத்தகாத மருந்துகள் பலவற்றைப் பிரசுரம் செய்து
அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள்
மருந்தை அம்மாதிரியாக நம்புவீர்களென்று ஓர் சந்தே
கம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் வரவழை
த்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே
அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் சந்தானம்
ஆயுசு, பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்
கும் மனிதருக்கு ரத்தமே மூலமாயிருக்கிறது. ஆன
தால், ஆரோக்கிய பாக்யமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்
தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுத்தமாய் காப்
பாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் நானாவிதமான
வியாதிகள் உண்டாகி மரணகால பரியந்தம் விசனத்திற்கு ஆளாக்கு
கிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனி
ரி முறப்பாதேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமி
ஸ்டான் ருவித்து அதில் முறப்பா செய்திருக்கிறோம். சாலாமி
சிரியை த மூத்திரசம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இர
த்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்
பதையும கை, கால், தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும்
இன்னும் அநேகவித வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தி தேகத்துக்கு ஆரோக்
கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அப்படி கொடுக்கிறதில் யாதொரு
ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்
பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி முறப்பா மிகவும் மேன்மை
யானது. தவிர மற்றெதுவும் இம்முறப்பாவுக்கு ஈடாகாது. இம் முறப்
பாவில் எவ்விதமான அசுசி பதார்த்தங்கள் சேருகிறதில்லை. மிகவும் மேன்
மையான பதார்த்தங்களும் அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயார்
செய்யப்பட்டிருக்கிறது. இம்முறப்பா சாலாமிசிரியால் செய்யப்படவில்லை
யென்று ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும். அப்படி
கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்
ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக்கொடுக்கும் 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதயான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி மூலமாய் தங்கள் இருப்பிடத்தை பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி. மன்னாலால், டில்லி வைத்தியர்,

நெ. 5 ஆவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1917-௵ ஜூன்௴
பிங்கள௵ ஆனி௴ | பகுதி 2

பத்திராசிரியர் பக்கம்.

இச்சஞ்சிகையின் 52-ஆம் பக்கத்தில் மதுரைத் திராவிட வித்தியா சங்கத் தலைவராகிய பி. ஆர். ஐயாசாமி ஐயரவர்கள் நமக்கு எழுதிய நிருபத்தைப் பிரசுரித்திருக்கிறோம். தற்காலத்திய மாணாக்கர்களுக்கு மத விஷயமான படிப்பினையைக் கற்பியாதிருப்பது விசனிக்கத் தக்கது என்றும் இக்குறையை நீக்கும் வண்ணம் முயலுவது மாணாக்கர்களின் அபிவிருத்தியைக் கோரும் இந்தியரின் கடமை என்றும் அவர் அபிப்பிராயப் படுகிறார். மாணாக்கர்களுக்கு மதவிஷயமான படிப்பினையை கற்பித்தல் நலமென்று அநேகர் கருதுகிறார்களாயினும், இந்தியப் பள்ளிகளில் மதக் கல்வியைப் புகட்ட ஒருவரும் விசேஷமாய் முயற்சியெடுக்கக் காணோம். நமது பத்திரிகையின் பிரதி ஒன்றை பள்ளிக்கூடங்களில் உள்ள புஸ்தகாலய மேஜையின் மேல் கிடக்கும்படி செய்தால், மாணாக்கர்களும் அதைப் படித்து விசேஷமான பலனை யடைவார்கள்; மேற்கூறிய நிருபர் கூறியபடி நம்மவரும் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றினவர்களாவர். நமது பத்திரிகைக்குச் சந்தா வரு

ஷம் ஒன்றுக்கு ரூபா இரண்டு தான். பள்ளிக்கூடத் தலைவர்கள் இதை ஒரு பொருட்டாய் எண்ணாமல் மாணவர் உபயோகத்துக்காக ஒரு பிரதியைத் தருவித்து மேற்கூறிய படி உபயோகிக்கலாம். அல்லது அவர்கள் அங்ஙனம் செய்ய இணங்காவிட்டால் மாணாக்கர்பால் அன்புள்ள வேறு யாராவது தண்டாய் ஒரு பிரதியை வாங்கி அவர்கள் உபயோகித்துக் கென்றே தானம் செய்யக் கூடாதா?

தற்கால நிலைமை.

பம்பாய் ராஜதானியில் கோலாப்பூர் ராஜ்யத்தில் ஜகத்குரு ஆதிசங்கராசாரியரால் ஸ்தாபிக்கப்பெற்ற கரவீர சங்கராசாரிய மடம் ஒன்று இருக்கிறது. அந்த மடத்தில் தற்போது சங்கராசாரியராக வீற்றிருக்கும் ஸ்ரீவித்யா நரசிம்ம பாரதிகளுக்குப் பின் அவ்வுயர்ந்த பதவியை வகிப்பதற்காக வாரிசை நியமிக்க வேண்டியதாயிருந்தது. அம்மகிமை பொருந்திய பதவிக்கு கோலாப்பூர் மகாராஜா சத்திரபதியவர்களுடைய சம்மததத்தின் பேரில பிரகிருத சங்கராசாரியாரவர்கள், டாக்டர் ஸ்ரீலிங்கேச மஹா பாகவத் என்ற மஹானை நியமித்திருக்கிறார்கள். சென்ற மேமீ 30 தேதியன்று, கோலாப்பூரில் திவான் ராய் பஹதூர் ரகுநாத வெங்காஜி ஸப்நிஸ் ஸி. ஐ. இ. அவாகள் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்ற பெரும் சதஸில் ஸ்ரீ மஹா பாகவத் அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன.

* * *

ஸ்ரீ மஹா பாகவத் அவர்கள் தார்வார் ஜில்லாவில் ஒரு உத்தம தேசஸ்த பிராஹ்மண குலத்தில் ஜனித்தவர்கள். பால்யம் முதற்கொண்டே நமது புராதன நூல்களிலும் சாஸ்திரங்களிலும் விசேஷமான பற்றுள்ளவர். மஹாராஷ்டிர ஸாது சிரேஷ்டரான கொண்டவலேகரோடு 7 வருஷ காலமிருந்து அவர்களுடைய கிருபைக்குப் பாத்திரரானார். கல்கத்தா, சிருங்கேரி, காசி முதலிய இடங்களுக்

குச் சென்று ஹிந்து சாஸ்திரங்களையும் பிற மதஸ்தர்களுடைய அபிப்பிராயங்களையும் அறிந்து சமரஸ புத்தி வாய்ந்தவர். தத்வ சாஸ்திரம் ஞான சாஸ்திரம் விஷயமாய் அநேக புத்தகங்களும் வியாசங்களும் எழுதி, வெளியாக்கியுள்ளார். அவருடைய நுண்ணிய ஆழ்ந்த அறிவை மெச்சி பல வித்துவத் சபைகள் இவரைத் தம் அங்கத்தினராயிருக்கும்படி கோரிச் சம்மானித்திருக்கிறார்கள். இம்மஹானுடைய அறிவை மெச்சி அமெரிக்காவின தலைநகரான வாஷிங்டனில் இருக்கும் "ஓரியண்டல் யூனிவர்சிடி" என்ற கீழ்நாட்டு வித்யை நாகரீகம் இவைகளை கற்பிப்பதற்காக ஏற்பட்டுள்ள சர்வ கலாசாலையாரால் இவருக்குத் தத்துவ சாஸ்திர டாக்டர் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. மேனாட்டுத் தத்துவ ஞானத்திலும் இந்திய தத்துவஞானத்திலும் இவர் பாரங்கதர். ஆங்கிலத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் விசேஷமான பாண்டித்தியம் பெற்றவர். 1912-ஆம் வருஷம் தஞ்சாவூர் பரிஷத்தில் இவர் செய்த ஸம்ஸ்கிருத பிரசங்கத்தை யாவரும் வியந்தார்கள். இந்தியாவில் ஸநாதன தர்மத்தை மறுபடியும் நன்கு நிலைநாட்டுவதில் மிகுந்த சிரத்தையையும் இந்தியா முன்னுக்கு வரும் என்ற நன்னம்பிக்கையும் கொண்டவர். இத்தகைய பெருமை பொருந்திய ஒருவர் ஜகத்குரு பீடத்துக்கு அதிபதியாக ஏற்பட்டிருப்பது இக்காலத்தின் விசேஷத தன்மையைக் காட்டுகிறது. தற்காலத்தில் இந்தியர்களுடைய புதிய நோக்கங்களையும், சீர்திருத்த ஆவல்களையும் அறிந்தவர். இவர் இவ்வுயர் நிலையை அடைந்தது நம் நாட்டுக்கு நன்மையைப் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

*
* *

இந்திய ராஜப்பிரதிநிதி, மதராஸ் பம்பாய் கவர்னர்கள் இவர்களிடமிருந்து ஸ்ரீ மகா பாகவத் அவர்களுக்கு வந்த உபசார கிருபங்களையும் அவ்வமயம் வாசித்தார்கள். மைசூர் யுவராஜா அவர்கள் தங்களுடைய நன்கு மதிப்பை

யும் சந்தோஷத்தையும் வெளியிட்டுப், இப்புதிய பதவியி லமர்ந்திருக்கும்போதும் முன்போலவே பங்களூரில் இருக்கும் ஸம்ஸ்கிருத கலாசாலையில் சிரத்தை குன்றாதிருக்கும் படி வேண்டியும் கடிதம் எழுதியிருந்தனர். பம்பாயிலிருந்து ஸர் பிரபாசங்கர் பட்டாணியும், மதராஸிலிருந்து ஸர் சிவஸ்வாமி ஐயரவர்களும், காசியிலிருந்து பாபு பகவான் தாசரும், மைசூரிலிருந்து திவான் பகதூர் பட்டண்ண செட்டியாரும் இன்னும் வி. பி. மாதவ ராவ் அவர்களும், வி. பி. ராமஸ்வாமி ஐயரவர்களும் இன்னும் இந்தியாவின் பற்பல பாகங்களில் உள்ள பல பிரமுகர்களும், பத்திரிகைகள் மூலம் தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டார்கள். பம்பாயில் ரிஜிஸ்டிரார் யூபாங்க், டாக்டர் எச். எச். மான், கர்னல் உட்ஹௌஸ், பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜ் ஹீடன் முதலிய ஆங்கிலேயர்களும் தங்கள் பகுமானத்தைக் கடித மூலம் வெளியிட்டார்கள். 12 சபைகளுடைய உபசாரபத்திரிகைகள் ஆங்கிலத்திலும், ஸம்ஸ்கிருதத்திலும் வாசிக்கப்பட்டன. சென்னையிலிருந்து வந்திருந்த ஹைகோர்ட்டு வக்கீல் டி. எஸ். நாராயண சாஸ்திரியவர்கள் ஸம்ஸ்கிருதத்தில் ஒரு உபசாரப் பத்திரிகை படித்தார்கள். பங்களூர் ஸம்ஸ்கிருத கலாசாலையிலிருந்து ஒரு ஸம்ஸ்கிருதப்பத்திரிகையும் அமல்நர் என்ற பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய தத்துவஞான சபையிலிருந்து ஒரு ஆங்கிலப் பத்திரிகையும் பிரஹ்மஸ்ரீ சாமி சாஸ்திரியாலும் ஸ்ரீமான் விட்ஜரி யென்ற ஆங்கிலேயராலும் படிக்கப்பெற்றன. வயோவிருத்தரான டாக்டர் ஸர். ராமகிருஷ்ண பண்டார்கர் தான் நேரில் வர முடியாததைப்பற்றி வருந்தி, ஸ்ரீ லிங்கேசர் இவ்வுயர் பதவிக்குக்கு வந்தது இந்தியாவுக்கு க்ஷேமகரம் என்றும், காலத்திற்கு ஏற்றது என்றும் எழுதியிருந்தார். எல்லாவற்றிற்கும் டாக்டர் லிங்கேசர் ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் வந்தனம் கூறி மறுமொழி கொடுத்தார்.

*
* *

நாளிது ஜூன் மீ 4-வ பகல் 11-30 மணிக்கு சங்கராசாரியாராக அபிஷேகம் நடந்தது. இம்மஹான் காலத்தில்

நடக்கும் சீர்திருத்தங்களையும், அபிவிருத்தியையும் ஆவ லுடன் கவனித்து வருவோம்.

*
* *

ஸ்ரீமான் ஜினராஜதாஸரின் மனைவியார் ஒவ்வொரு பிரஹ்மஞான சபைக் காரியதரிசிக்கும் அங்கத்தினர்கட் கும், ஒரு நிருபம் எழுதி விடுத்திருக்கிறார். "இந்தியாவா னது முன்னேற்றமடையவேண்டும் என்பது ஒவ்வொரு இந்தியனுடைய தீவிரமான ஆவல் என்பதில் ஐயமில்லை. அது கைகூடுவதற்கு வேண்டிய சாதனம் என்ன? இந்திய புருஷர்கள் மட்டும் அறிவிலும், தேச பக்தியிலும், மாதிரு பூமி கைங்கர்யத்திலும் மிகுந்தால் போதுமா? இந்திய ஸ்திரீகள் அறிவின்றி, உயர் நோக்கமில்லாமல், உதரபோ ஷணையைத்தவிர வேறு கைங்கரியமும் செய்யாமல் இருந் தால் இந்தியா முன்னேற்றமடையுமா?

*
* *

"இந்தியாவில் பற்பல ஆசார சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று இந்தியர் முயன்றும், அவை கைகூடாம லிருத்தற்கு காரணம் என்ன? இந்தியமனைவியர் அறிவி னமல்லவா? தீர்க்கமும் விசாலமுமான யோசனையில்லாவி ட்டால் ஒவ்வொரு மாறுதலாலும் என்ன கெடுதி நேரிடு மோ என்ற பயம் உண்டாவது தானே இயற்கை. ஆகை யால்தான் இந்தியப்பெண்கள் முன்போன வழியே போய்க் கொண்டு, ஒரு மாறுதலுக்கும் இணங்குகிறதில்லை. ஆனால் அவர்களைக் குறைகூறுவதில் பயனில்லை. அவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டிய சௌகரியங்கள் கொடுக்காதது இந்திய புருடரின் குற்றமே. அவ்வண்ணம் செய்யின் அவர்கள் தங்களுடைய யுக்தி புத்திகளை உபயோகப்படு த்தி இந்தியா முன்னேற்றமடையும்படி செய்யவேண்டிய கடமைகளையும் நிறைவேற்றுவார்கள். இந்தியாவில் தற் போது ஏற்படுகிற விசேஷமான மாறுதல்களிலும், கிளர்ச் சியிலும். தங்களால் கூடிய கைங்கரியத்தைச் செய்ய ஆவலு ள்ள அநேகம் ஜீவர்கள் இந்தியாவில் இந்திய மாதாக்களின் வயிற்றில் பிறக்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள் .உத்த

மமான ஜீவர்கள் பிறக்கவேண்டுமானால், அதற்கு ஏற்ப இந்திய மாதர்கள் புத்தி விசாலத்தையும் அனுதாபத்தையு முடையவர்களாயிருக்கவேண்டும். இந்தியர் கிருஹங்கள் சுத்தமாயிருக்கவேண்டும். இந்தியப் பெண்கள் குழந்தைகளை சுகாதார சாஸ்திரத்தின் கற்பினைக் கிணங்கும் முறைகளில் வளர்க்க அறியவேண்டும். சிறிய சரீரத்தில் விளங்கும் ஜீவனை அன்புடன் நேசிக்கவேண்டும். குழந்தைகளைக் கோபிக்கக் கூடாது. கடிந்து பேசக் கூடாது. கையாலோ, கம்பினாலோ புடைத்தல் கூடாது. அவர்களை அன்புடன் பேணி, வளர்க்கவேண்டும். அப்படிச் செய்தால் குழந்தைகளுடைய குணங்கள் சீக்கிரம் விகசிக்கும். குழந்தைகளைக் கையாளும் முறைகளை ஸ்திரீகள் கற்பது அதியவசியம்.

*
* *

"இந்திய மாதர்களில் சிலர் விதவைகளாயிருக்கிறார்கள். அவர்களும் மற்றவர்களும் வைத்தியம், வாத்திமைத் தொழில் இவைகளைக் கற்கவேண்டுமென்று ஆவலுள்ளவர்களாயிருக்கலாம். அப்படிப் பட்டவர்களுக்கு அவர்களுடைய இஷ்டப்படி கல்வியைக் கற்கத் தேவையான சாதனங்களை ஏற்படுத்தவேண்டும்.

*
* *

"எல்லா விதத்திலும் ஒரு இந்தியஸ்திரீ தன்னுடைய ஆத்மசக்திகளுடன் புத்தி, அன்பு, இவைகளை விகசிக்கும்படி செய்யப்போதுமான சௌகரியங்களை உண்டாக்குவது இந்தியரின் கடமை. இதற்காக ஒவ்வொரு ஊரிலும் ஸ்திரீகளின் இந்தியசங்கம் என்று ஒரு புதிய சங்கம் ஏற்படவேண்டும். அடையாற்றில் தலைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தின் நோக்கங்களாவன:—

1. இந்திய ஸ்திரீகள் தங்கள் உத்தரவாதத்தை அறியும்படி செய்தல்,

2. இந்தியாவின் க்ஷேமம் அவர் கைக்குள் இருக்கிறதென்று அறிதல், (இனிவரும் இந்தியரைப் பெற்றுப் போஷிக்கும் கடமையவர்களதல்லவா?)

3. ஸ்திரீகள் சங்கங்களாய் சேர்ந்து ஆத்மவிகாசம் பெறவும் கல்வி கற்கவும், பரோபகாரம் செய்யவும் முயலு தல்.

"மேற்கண்ட நோக்கங்களைக் கொண்டு அவைகள் சித்திக்கும் வண்ணம் முயல விரும்பும் ஸ்திரீகள் அங்கத்தினராய்ச் சேரலாம்.

"ஏனைய நகரங்கள் கிராமங்களில் ஸ்தாபிக்கும் சங்கங்களை அடையாற்றுத் தலைச்சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு கிளைச்சங்கமும் ஒரு குறிப்பிட்ட கைங்கரியத்தைச் செய்வதாய் அங்கீகரிக்கவேண்டும். அதுஎன்ன என்று கிளைச்சங்கத்தாரே தீர்மானிக்கவேண்டும். கூடிய சீக்கிரத்தில குழந்தை பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, ஸதிரீ தர்மம் இவ்விஷயங்களைப்பற்றி ஆங்கிலத்திலும், தேசபாஷைகளிலும் துண்டுப்பத்திரிகைகள் வெளிவரும்.

*
* *

"ஒவ்வொரு பிரஹ்மஞ்ஞான சபையிலும் இப்படி ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்க முயலவேண்டும். ஆனல் இந்த சங்கத்தில் சேரவிரும்புவோர் அச்சபை அங்கததினராக இருக்க வேண்டுவதவசியமில்லை." என்று அந்த நிருபததில் கூறப்படுகிறது. இச்சங்கமானது மிகவும் சிலாக்கியமானது. நண்பர்கள் எல்லோரும் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் ஒரு சிறுசங்கம் ஏறபடும்படி செய்வார்களாக.

*
* *

சென்ற மேமீ 8உயன்று ஒவ்வொரு பிரஹ்மஞ்ஞான சபையிலும் வெண்தாமரை நாள் கொண்டாடப் பெற்றது. மூன்று சபைகளிலிருந்து வந்த சமாசாரக்குறிப்பை இச் சஞ்சிகையில் பிரசுரித்துள்ளோம். சகலஜீவராசிகளின் சகோதர பாவத்தை யுணர்த்தும் வண்ணம் ஜாதி வித்தியாசமின்றி ஏழைகளுக்கு பசியாறும்படி அன்னமளித்தலே மிக்க தர்மம் யாதுளது? சகலமதங்களும் ஸநாதனமான உண்மையையே போதிக்கின்றனவென்றும், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப, ஒரு தத்துவமானது ஒரு மதத்தில் வற்

புறத்தப்பட்டு மற்றொன்றில் வேறு ஒரு உண்மை வற்புறுத்தப்படுகிறதென்றும், உண்மையில் வேறுபடும் சமயமெல்லாம் உண்மையான பரம்பொருளை அடையும் வழிகளேயென்றும், நன்குணர்த்துவதற்கு சகல மதக்கிரந்தங்களினின்றும் குறிப்பிட்ட பாகங்களை வாசித்தலைவிட சமரஸ புத்தியைப் புகட்டும் வழியாதுளது?

*
* *

பிரஹ்மஞான சபையை ஸ்தூல உலகில் ஸ்தாபித்தவர்களில ஒருவரான ஸ்ரீஹெலினு பிளவாட்ஸி அம்மாளின் ஞாபகத்தின் பொருட்டுக் கொண்டாடப்பட்ட இத்திருநாளில் பின்னர் காலம்சென்ற இதரசிரேஷ்டர்களையும அன்று அன்புடனும் பக்தியுடனும நினைத்தலும் மிகவும் பொருத்தமுள்ளது. ஏன் என்றுல் ஞான சகோதரர்கள் அனைவரும் ஒரு அரசனுடைய பணியாளர் அல்லவா? அவர்கள் எல்லோரையும் ஒருங்கே நினைத்தல் அவர்களுடையவும் அவர்களை நினைப்பவர்களுடையவும் சகோதரத்துவத்தைக் காட்டுகின்றது. நினைப்பவர்களுக்கும் அம்மஹான்கள் பெற்ற உயர்நிலையைத் தாங்களும அடையமுடியும் என்றும் அறிவிக்கின்றது.

*
* *

பாண்டிய நாட்டு பிரஹ்மஞான கிளைச்சங்கங்களின் கான்பரென்ஸ் நாளது மீ 20, 21, 22 தேதிகளில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கடுத்த ராஜபாளையத்தில் கூடும் ஸ்ரீமான் ஜினராஜ தாஸரவர்களும், திவான் பஹதூர் ஜஸ்டிஸ் ஸதாசிவ ஐயரவர்களும் அக்ராஸனம் வகிப்பார்கள். ஸ்ரீ டொரதி ஜினராஜதாச அம்மாளவர்களும், ரிடைர்டு சப்ஜட்ஜும் தற்போது பிரஹ்மஞான சபை இந்திய செக்ஷன் காரியதரிசியுமான டி. ராமசந்திர ராயர் அவர்களும் அவர்மனைவியாரும் வருவார்கள். எல்லோரும் விஜயம் செய்யும்படி வேண்டிக்கொள்கிறோம்.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

பிரஹ்மக்ஞான தர்சனம். (பாலபாடம்.)

அத்தியாயம் 19.

மனித சரீர அமைப்பு:—மானச சரீரம்.

கடவுளைப்பற்றிய எண்ணங்களும் பிறருக்கு உதவி புரியும் எண்ணங்களும் மெருகிட்டுச் சதுரித்த சலவைக் கற்கள் போலிருக்கின்றன. அவைகள் பலமுறை மினுமினுப்பும் அழகும் வாய்ந்தவை. சுயநயம் பாராட்டும் எண்ணங்களும் கெடுதலுண்டாக்கும் எண்ணங்களும் சாதாரணக் களிமண்போலவும், கெட்ட செங்கல்கள் போலவும், உவடரித்த மண் கட்டிகள் போலவும், இருக்கின்றன. இவைகளால் கட்டடம் சம்பந்தப்பட்டமட்டில் ஒரு பிரயோசனமும் இல்லை.

மேற்சொன்ன இருவகை எண்ணங்களும் மானச சரீரமாகிய கட்டடத்துக்கு சுவர் வைக்க உதவலாம். ஆனால் என்ன வித்தியாசம்? ஒருவனுக்கு சலவைக் கற்களால் ஒரு அரண்மனை கட்ட முடியுமாகில் அவன் கெட்ட செங்கற்களையும் உவட்டு மண் கட்டியையும் கொண்டு வீடு கட்டி அதில் குடியிருக்க விரும்புவானா? நிச்சயமாய் ஒருவனும் விரும்பான்.

இந்தக்கட்டடம் கட்டுவது உன்னிஷ்டத்தைப் பொறுத்து உன் கையில் இருக்கிறது. எதைச் செய்யலாமென்பதை நீயே பகுத்தறியவேண்டியது. வேறொருவரும் உனக்குப் பகுத்தறிவிக்கமாட்டார்கள். உன் வீட்டை நீயே கட்டவேண்டும். கட்டி முடிந்த உடன் அதில் நீ வசிக்கவேண்டும். எதை நீ தெரிந்தெடுப்பாய், உவடரித்த மண்கட்டிகளையா, மெருகிட்ட சலவைக்கல்லையா ?

இவ்விடத்தில் ஒரு சூசனையும், அத்துடன் ஆத்மபரமும் மானசிகமுமான இரசவாதத்தைப் பழக ஒரு சந்தர்ப்ப

மும் ஏற்படுகிறது. கெட்ட எண்ணத்தை நல்ல எண்ணமாக நீ மாற்றுகிற ஒவ்வொரு சமயத்திலும் அல்லது ஒரு கெட்ட எண்ணம் வரும்போது அதைத்தடுத்து அதற்குப் பதிலாக ஒரு நல்ல எண்ணத்தைப் பிரவேசிக்கச் செய்யும் போதும் உன்மானச சரீரமாகிற கட்டடத்திலுள்ள உடைந்த செங்கலையாவது மண்கட்டியையாவது யெடுத்தெறிந்து, அதற்குப் பதிலாக அதே அளவுள்ள சலவைக்கல்லை வைக்கிறாய். ஆகையால் நீசெய்யவேண்டியதெல்லாம் போதுமான நீடித்தகாலம் வரை மேற்சொன்ன இரசவாத வித்தையை விடாமல் செய்துவரவேண்டியது. அப்படிச்செய்து வந்தால் நீ மூடனாயும் தெரியாதவனாயுமிருந்த காலத்தில் உன்மானச சரீரத்தில் சேர்த்துக் கட்டப்பட்டுள்ள கெட்ட சாமான்களை யெல்லாம் கழித்துச் சுவாகளைத் திடப்படுத்துவாய். இவ்விதமாய்ப் பூர்த்தியான அரண்மனை போன்ற மானச சரீரத்தையடைவாய்.

மானச சரீரமானது மகாமேன்மையானதும் நேர்த்தியானதுமாயிருக்கிறது. ஆகையால் இந்தப் பூலோகத்தில் நாம் எடுக்கிற ஒவ்வொரு ஜன்மத்திலும் நமக்கு ஏற்படுகிற மூன்று சரீரங்களுக்குள் இது மகாமுக்கியமானது. அதிலிருந்துகொண்டு நாம் அதிகமாய் நீடித்திருக்கக்கூடிய வேலைகளைச் செய்கிறோம். ஏனெனில் காரண சரீரத்தில் சேரக்கூடிய சாமான்கள் மானசிக வேலைகளே தவிர அதற்குக்கீழானவைகள் அல்ல. கீழான சரீரங்களான இச்சா சரீரத்தாலும் ஸ்தூலசரீரத்தாலும் நாம்செய்யும் காரியங்களெல்லாம் நம்முடைய எண்ணங்களிலிருந்து பிறந்தவை. ஒரு காட்டு மிருகம் நினைப்பில்லாமல் அனேக காரிங்களைச் செய்கிறது. அது ஒரு காரியத்தைச் செய்ய விரும்பும்போது அதிலிருந்து என்ன விளையுமென்பதை சற்றேனும் யோசியாமல் செய்கிறது. மனிதர்களோ,முக்கியமாய் நாகரீகமடைந்த மனிதர்கள், தங்கள் சரீரங்கள வெகு இளமைப் பருவத்திலிருக்கும்போது கூட ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி

நினைத்து, வரப்போகிற காரியங்களைக் குறித்து முன்னால் தீர்மானம் செய்துகொள்ளுகிறார்கள்.

ஒரு சமயத்தில் வித்தையாடுகிற காடி ஒன்று கொதிக்கிற தண்ணீருள்ள ஒரு கொப்பரையை எடுத்துக்கொண்டது. அது கையைச் சுட்டதால் அப்பாத்திரத்தை இருகைகளாலும் இருக்கிப் பிடித்து தன் தேகத்தோடு நெருக்கியணைத்துக்கொண்டு கூத்தாடிற்று. அந்த ஆட்டத்தினால் கொதிக்கிற தண்ணீர் உடம்பிலெல்லாம் சிந்தவே துன்பத்தினாலும் பயத்தினாலும் வெறிகொண்டு திரிந்தது. ஆனால் அந்தப்பாத்திரத்தைக் கீழே போட்டுவிடவேண்டுமென்று அது நினைக்கவில்லை. தன் சத்துருவை நசுக்கிக்கொல்லுவது அதன் சுபாவம். அவ்வளவுதான் அதற்குத்தெரியும். அது அவ்வருத்தத்திலிருந்து சௌக்கியமடைந்தால் அந்தக் கொப்பரையை மறந்துவிடும். ஆனால் வேறொரு கொப்பரையைக்கண்டபோது பயந்து ஓடும். ஆனால் ஒரு மனிதன் செய்வது போல் அதற்குச் செய்யத் தெரியாது. மனிதன் தனக்கு நேர்ந்த சம்பவங்களை ஆதியோடந்தமாய் யோசித்து எந்தவிடத்தில் தான் தவறுதல் செய்தானென்றும் மறுபடியும் கொப்பரையைக் கண்டால் அது விஷயமாய் தான் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டியதென்பதையும் தீர்மானிப்பான். கொப்பரை விஷயமான பூரா சங்கதிகளையும் தெரிந்து கொள்ளும்வரை அந்த மனிதன் அமர்ந்திருக்கமாட்டான். அப்படித்தெரிந்துகொண்டவுடன் அக்கொப்பரையை தன் விஷயமாயும் தன் விரோதி விஷயமாயும் எவ்விதம் உபயோகிக்கலாமென்பதையறிவான். இவ்விதம் நினைத்துப் பின் வரவேண்டிய விஷயங்களைப்பற்றித் தீர்மானிப்பதினால் அந்த ஜன்மத்தின் முடிவில் இது அவன் காரண சரீரத்தில் ஒரு சக்தியாக அமையும். அந்தச் சக்தியை வேறொருவனுக்குத் துன்பமுண்டாகும்படி உபயோகித்து அதனால் இவனுக்குப் பதில் துன்பம் நேர்ந்து கஷ்டப்பட்டால் அதைக்குறித்து அவன் வெகு

வாய் எண்ணுவான். தான்செய்தது தவறென்று தீர்மானிப்பான். இத்தீச்செயலின் ஞாபகமானது அவன் காரண சரீரத்தில் சாரும். அடுத்த ஜன்மத்தில் இவ்விதத் தீங்கு செய்ய அவன் எத்தனிக்கும்போது "அப்படிச் செய்யாதே முன்னமே உனக்குத் தீங்கு நேரிட்டிருக்கிறது" என்று ஞாபகமானதுசொல்லும். இதைத்தான் மனச்சாக்ஷி என்பார்கள். அதாவது சென்ற தீச்செயல்களின் அனுபவ ஞாபகம். மனிதர்களுடைய மனச்சாக்ஷிகள் ஒன்றுக்கொன்று பரஸ்பர பேதமுள்ளவைகளாயிருக்கின்றன. ஏனென்ருல் ஒவ்வொருவருடைய அநுபவங்களும் வெவ்வேரும்.

வி. வெங்குசாமி ஐயர்.

மதுரை,
21—5—1917

"பூர்ணசந்திரோதயம்" பத்திராசிரியர்க்கு

ஐய,

தங்கள் பத்திரிகையைப்பற்றி நான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தயவு செய்து அங்கீகரித்திடுக. இப்பத்திரிகை மதசம்பந்தமாகவும் கலைசம்பந்தமாகவும் தற்கால நாகரீகத்திற்கேற்பவும் எழுதப்பெற்ற பலவரிய விஷயங்களைக் கொண்டதாகும். சிலவாணைகளாக 'தற்கால நிலைமை' 'பிரம்மஞ்ஞான தரிசனம் பாலபாடம்' என்ற தலைப்புகளுடன் வெளியாகும் வியாசங்கள், அவைகளை ஆவலுடன் படிக்கும் மாணவர்களுக்குப் பெரும் பயனளிக்கும்.

இந்துமதத்தை மாணவர்கள் பயிலும் பாடங்களிலொன்ருகக் கொண்டுள்ள இந்திய கல்லூரிகளில், அம்மாணவர்கள் இப்பத்திரிகையில் அடங்கிய விஷயங்களைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும், நம்மதத்தின் அருமைபெருமைகளை அறிவதுடன், மதாபிமானமும் தேசாபிமானமும் அடைவரென்பதற்கையமில்லை. தற்காலத்தில் நமது சுதேசக் கலாசாலைகளில், இந்தியசிறுர்கட்குச் 'சநாதநதர்ம'த்தைப்பற்றிப் பாடம் போதிக்காமலிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கதே. நம்மவர்களின் அபிவிருத்தியைக் கோருவார், இக்குறையை நீக்கவேண்டுங் கடமைகளிலொன்ருகக் கருதல் நலமாம். எம் சங்கத்தின் அங்கத்தினர்கள் நும்பத்திரிகையின் விஷயங்களை விரும்பிப் படித்துப் பெரும் பயனடைந்து வருகின்ருர்கள்.

இங்ஙனம்,
பி. ஆர். ஐயாசாமி,
திராவிட வித்தியா சங்கத்தலைவர்.

நக்ஷத்திரப் பிரகாசம்.

நக்ஷத்திர ஸம்பாஷணை.

மீனாக்ஷி.—ஸரஸ்வதி, நானுனக்குச் சில துண்டுப் பத்திரிகைகளைக் கொடுத்தேனே, படித்தாயா?

ஸரஸ்வதி.—ஆம் படித்தேன். சில சந்தேகங்களிருக்கின்றன. அவைகளை விள்ள விரும்புகிறேன். அப்பத்திரிகைகளின் தலைப்பில் "உதயதிசை நக்ஷத்திர சங்கம்" என்று எழுதப்பட்டிருக்கிறதே அதன் அர்த்தத்தை எனக்கு விளக்கிச்சொல்ல வேண்டுகிறேன்.

மீ.—உலகத்தில் உள்ள அனைவரும் தம் ஆத்மசக்திகளை மலரச்செய்து படிப்படியாக மேலேறும் பொருட்டு, உலகமுழுமைக்கும் பரமகுருவாய் நின்று, பற்பல காலங்களில் பற்பல தேசங்களில் பற்பல அவதார மூர்த்திகளாய்த் தோன்றி பற்பல மதங்களை ஏற்படுத்திவரும் அதிகார புருஷர் ஒருவர் உளர். இவரைத்தான் நக்ஷத்திரமென்று கூறுகிறோம். நமது ஹிந்துமத கிரந்தங்களில் அவர் உத்தியோக பதவிக்கு வியாசர் என்று பெயர். உலகத்தில் எவ்வளவோ கியாதியோடு அரசுபுரிந்த சக்கரவர்த்திகளும் வீரர்களும் இருந்தாலும், அவர்கள் பெயரைப் போற்றுவது உலகத்தில் சொற்பம். ஆனால், ஸ்ரீகிருஷ்ணனென்ன, பகவான் புத்தரென்ன? கிரிஸ்து என்ன, மஹம்மது என்ன, பார்ஸீ ஜாதியார்களின் ஆசார்யரான ஸாரதுஷ்ரா என்ன, இவர்கள் பெயரை காதாற்கேட்ட மாத்திரம் உள்ளுணர்வில் ஓர் பக்தியைக் கொள்ளும் ஜனங்கள் உலகத்தில் கோடானுகோடியல்லவா? நக்ஷத்திரங்கள் எவ்வளவோ உன்னதமான ஸ்தானத்தில் இருப்பினும், அவைகளின் பிரகாசம் நமக்கு வருவதுபோல நமது பரமாசார்யரும் எவ்வளவோ உன்னத பதவியிலிருந்தாலும், உலக க்ஷேமத்திற்காக தமது அருட்பிரகாசத்தை வர்ஷிக்கிறார். அதனால் தான் அவரை நக்ஷத்திரமென்று சொன்னோம். நக்ஷத்திரம் என்பதற்கு எண்ணிறந்த அர்த்

தங்கள் உள்ளன. அவற்றை யெல்லாம் பின் ஒருசமயம் உனக்குச் சொல்வேன். இனி உதயதிசை என்பது கிழக்கென்று யாரும் அறிவார். முன் அநேகங்காம் நமது பரமாசார்யர் கிழக்குப்பாகமாகிய நமது ஆசியாவில் அல்லவா தோன்றியிருக்கின்றனர்? அதிலும் சிறப்பாக நம் இந்தியாவிலல்லவா உதித்திருக்கிறார்? அதேமாதிரி இக்காலத்திலும் "அவர் வருவார்" என்ற நமமவருள் அறிஞர் பலர் எதிர்பார்க்கிறார்கள்.

ஸ.—மற்ற விஷயங்களையெல்லாம் நான் படித்துப் பார்த்த மட்டில் எல்லாம் நியாயமாகவே தோன்றுகின்றன. பூர்வ சரித்திரத்திற்கும் ஒத்திருக்கின்றன. "பகவான் வரப் போகிறார்," என்பதை எல்லோரிடத்திலும் பரவச் செய்யும்போது பலர் நம்மை ஏளனஞ் செய்கிறார்களே?

மீ.—உனக்கிது ஆச்சரியமாயிருக்கிறது. அப்படிச்செய்வது அவர்கள் அறியாத குற்றமே. அவர்கள் படிசெய்வது நம் பாக்கியமென்று உணரவேண்டும். அறிய அவாவில்லாத சாமானியர் எக்காலத்திலும் இப்படி நடப்பது இயற்கைதான். ஸ்ரீ நாரத பகவானும் கூட அவர் இயற்றிய பக்தி சூத்திரத்தில் ஸ்ரீ குமார், வியாஸர், சுகர் முதலிய பெரியார் மரபைச்சொல்லும் ஓர் இடத்தில் "சாமானியர் பிதற்றலைக் கொண்டு பயமடையாதவர்கள்" என்று எழுதியிருக்கிறார். அத்தகைய குணத்தை அவர் மரபைச்சேரும் நாமும் பெற வேண்டுவது அவசியமல்லவோ?

ஸ.—"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்னும் பழமொழியின் உண்மையை நம்மவர் நன்கு தெரிந்துகொண்டார்களில்லை.

மீ.—அதனால் தான் பகவான் வரும் நற்செய்தியைப் பரவச் செய்ய நாம் விசேஷமாய் முயலவேண்டும். நம் தேசத்தில், மதம், ஆசாரம், நாகரீகம் கல்விமுறை இவைகளிலெல்லாம் வழக்கமாயிருந்த பழைய வழிகள் இக்காலத்தில் ஏன் உலைந்து போயின, அவைகளில் நவீனமான மாறுபாடு

கள் எங்ஙனம் நேர்ந்து வருகின்றன, என்பதை நாம் நன்ருய்த் தெரிந்து பிறருக்கு எடுத்துக்காட்டினுலொழிய, தகர்ந்து போகும் பழைய வழிகளிலேயே நம்மவர்கள் ஓர் விதமான முரட்டு அபிமானங் கொள்வார்கள். நம் தேசத்தில் மட்டுமல்லாமல் உலக முழுமையிலும் நாநாவிதங்களிலும் பெரியமாறுதல்கள் தற்காலத்தில் ஏற்பட்டு வருவதையும் எடுத்துக்காட்டி, இவையெல்லாம் உலகத்திற்கு நாதனுயிருக்கும் குருவின் ஸம்மதமில்லாமலா நடக்கிறது? என்றும் சுட்டிக் காட்டவேண்டும்.

ஸ.—இப்போது கலி முற்றிப்போய்விட்டது. தருமமே அழிந்து போய்விட்டது; சிறுவர் சிறுமியராகிய நாம் உதயதிசை நக்ஷத்திர சங்க விஷயமாய் சிரத்தையெடுத்து உழைப்பதெல்லாம் கேடு காலத்திற்குத்தான். பழைய நாட்களிலெல்லாம் இவ்வளவு விபரீதம் கிடையாது என்று வயதில் முதியோர்கள் சொல்லி வருவதால்,நமக்கு அதைரியம் ஏற்படுகிறதே.

மீ.—ஒரு உண்மையை உனக்குச் சொல்லுவேன் கேள். வயதானவர்களுக்கு அத்தகைய எண்ணம் உண்டாவது இயற்கை. அவர்கள் தம் வாழ்நாளில் எவ்வளவோ கஷ்ட நஷ்ட மடைந்தவர்களாகையால், எவ்விஷயத்தையும் ஆற அமர்ந்து யோசித்துக் கொள்வோம் என்றிருக்கிருர்கள். அதனுல், எவ்விஷயத்திலும் சாதகம் உளதா என்று யோசிக்குமுன் பாதகம் இருக்கும் என்று சந்தேகிக்கிருர்கள். அவர்கள் அதிக விழிப்பாயிருக்கக் கருதி இக்காலத்தில் சம்பவிக்கும் மஹத்தான அவதாரத்தை உள்ளுணர்வான பக்தியால் அறியத் தவறுகிருர்கள். பக்தியையும் சாஸ்திரத்தையுங் கொண்டு அவர்கட்குக் கூடியவரை நிரூபிக்க வேண்டும்; ஆயினும் இவ்விஷயத்தில் நாம் சிறுவர் சிறுமியோரையே பெரிதும் கவனிக்க வேண்டும். அவர்களிடத்தில் கல்மஷமில்லாத அன்பு நிறைந்திருக்கிறது. புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டி கல்மஷ மற்ற அவாவும் அவர்களிடம் மிகுந்திருக்கும். சிறுவர்களின் க்ஷேமத்திற்

காக எவ்வளவு ஊக்கமாய் நாம் இப்போது உழைக்கிறோமோ இம்மாதிரி முற்காலங்களிலும் இருந்திருக்குமானால் நமது தாய், தந்தையரும், பாட்டன், பாட்டியாரும் மாமன் மாமியாரும் துரபிமானமில்லாத அன்பையும் அறிவையும் கொண்டிருப்பார்கள். முன் நரஸிம்மாவதாரத்திற்கு பிரஹ்லாதர் ஆபத்தம் பண்ணும்போது கூட சிறுவர்களையே பக்தியிற் பழக்கி வந்தாரென்று கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? ஸ்ரீ கிருஷ்ணன் குழந்தைகளின் ஹிருதயத்திலேயே நர்த்தனம் செய்கிறானல்லவா? நாம உழைக்க வேண்டியதைப்பற்றியே கவனிப்போமானால், நக்ஷத்திரம் நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும். மேகங்கள் விலகும். தடைகள் தகர்ந்துபோம்.

கலியுகம் ஐயாயிரம் வருஷங்கள் இப்போது முடிவு பெற்றன. ஐயாயிரப் புரட்டு வரப்போகிறதென்றும், அப்போது உலகம் முற்றிலும் மாறுபடும் என்றும் நெடுநாளாக நமக்குள் பேச்சு நிகழ்ந்தாலும், இப்போது மாறுபடும் விஷயங்களைக் கண்டு நம்மவர் மலைக்கிறார்கள், வருத்த முறுகிறார்கள். ஏன்? மூலதத்துவம் ஒருபோதும் மாறாது, மூல தத்துவத்தின வெளி உருவந்தான் மாறும் என்று அவர்கள் உணர்ந்தார்களில்லை. உதாரணமாக, எக்கார்யத்திலும், எத்தேசத்திலும், எப்படிப் பட்டவரும் ஸத்யத்தையே கடைப்பிடிக்க வேண்டியது நியாயம். இது நமது சீலத்தைப் பற்றிய ஆசாரம். இது ஒருபோதும் மாறாத தத்துவம். வெளி ஆசாரம் மாறக்கூடியது. இதையும் விசாரிப்போம். நாம் முற்காலத்தில ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு கால் நடையாகச் செலலவேண்டியிருந்தது. இப்போது ரயில் முதலிய வண்டிகளை உபயோகிக்கக்கூடிய சௌகர்யம் இருக்கும்போது, கால் நடையாய்ச் செல்வது அறிவீனம். ஆகையால் நாம் எத்தகையரோடு பழகினாலும் அவர்கள் வெளி ஆசாரத்தைக் கவனியாமல், சீலத்தையே பெரிதும் கவனிக்கவேண்டும். எல்லோருமவெளி ஆசாரங்களில் நிச்சமாய் வேற்றுமைப்படவே தான் வேண்டும். ஒவ்வொருவருக்கும் சரீரக் கூறுபாடுகளும், மற்ற சௌகர்யங்

களும், அவரவர் பழகவேண்டிய இடங்களும் முறைமைக ளும் இக்காலத்தில் நிச்சயமாய் வேறுபடுகின்றன வல்லவா? பஸ்மருத்ராக்ஷதாரியாய் சிவ பூஜைசெய்து வரும் ஒருவரு டைய புத்திரன் நிஜார் சட்டைகளோடு டாக்டர் வேலை இக் காலத்தில் பார்த்து வரவேண்டி யிருக்கிறபடியால், வெளி ஆசரணைகள் இக்காலத்தில் மாறுபடுகின்றன. இருவரும்நற் சீலமுடையவர்களாயிருத்தல் மட்டும் அதி அவசியம். பண் டைக் காலத்துப் பாட்டன் பாட்டிமார், தமது நாட்களை பழைய நாட்களென்றும் சிலாக்கியமான காலமென்றும் நம் காலமாகிய தற்காலததை நவீனகாலமென்றும், விபரீதகால மென்றும்கூறுகிறார்கள். அவர்கட்கும் முந்தின அதிபிராசீன காலங்களில் இருந்த மைத்ரேயி, கார்கி, சூடாலை முதலிய பிரஹ்மக்ஞானிகளான ஸ்திரீ ரத்நங்களை முற்றும் மறந்து, தம்காலத்து மூடபக்த சிகாமணிகளாகிய நாணி, குப்பி முத லியவர்கள்போல் தான் உத்தம ஸ்திரீகள் நடக்கவேண்டிய தென்று எண்ணங்கொண்டிருக்கிறார்கள். தாம் வழக்கப் பட்டிருக்கும் அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள், ஆசரணை களுக்கு மாறானவற்றை யெல்லாம் இவர்கள் விபரீதமென் பர். உலகத்தில் நம்மைக் காட்டிலும் அறிவிலும் ஒழுக்கத் திலும் மேம்பட்ட எத்தனை பேர்கள், நாம் மிலேச்ச ரென்று கருதும் ஜாதியோர்களில் உளர்! என்று ஒரு க்ஷண மாவது இவர்கள் யோசிப்பாரானால், வீண் ஆக்ஷேபங்கள் கூறமாட்டார்கள். மேற்கூறிய பிரஹ்மவாதினிகள் ராஜ ஸதஸ்ஸில் கம்பீரமாய் பிரசின உத்தரங்கள் செய்த அழ கை அறிவரானால், தற்காலத்தில் உள்ள நமது பிரஹ்மக் ஞான ஸபை, உதயதிசை நக்ஷத்திர ஸங்கம் இவைகளில் சிர த்தை பக்தியோடும், அறிவோடும் பரோபகாரமாய் உழைக்க முன்வரும் ஸ்திரீ ரத்நங்களை அலக்ஷியமாய்ப் பேச நடுங்கு வார்கள். ஆத்ம வித்யையை ஆதாரமாகக் கொண்டு மூய லக் கருதும் ஆசார சீர்திருத்த முறை ஒன்றும் புதிதல்ல. நமது இந்தியாவின் அதி புராதன சரித்திரத்தில் வழக்கத் திலிருந்தனவே இப்போது திரும்ப ஏற்படுகின்றன.

ஸ.—நீங்கள் சொன்னதினின்றும் எனக்கு மெத்த தைரியம் ஏற்பட்டுளது. இவ்வுண்மைகளையே இனிப்பிறருக்குச் சொல்லி அவர்களைச் சமாதானப் படுத்துவேன். நான் போய் வருகிறேன். நேரமாய் விட்டது. இதே மாதிரி ஒவ்வொரு நாளும் சாயங்காலம் சிறிது நேரம் பேசுவதற்கு உங்களுக்குச் சௌகரியம் உண்டோ?

மீ.—சாயங்காலம் ஆறுமணி முதல் ஏழு மணி வரை எனக்கு சாவகாசமுண்டு. உன் நண்பர்கள் எவரையும் அழைத்துக்கொண்டு வருவாயானாலும், உங்களுடைய கேள்விகளுக்கு நான் அறிந்தமட்டில் விடை கூறத் தயாராயிருக்கிறேன். நீங்கள் கேட்கிறவைகளைச் சிந்தித்து இன்னும் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வது நல்லது தான். நமஸ்காரம். போய் வருக. நக்ஷத்திரம் உனக்குத் துணை செய்யும்.

ஜகத்குருதாஸன்.

*
* *

நாளுக்குநாள் ஒளிஅதிகரிக்கிறது. தொன்றுதொட்டு தமிழ் நாடுகளுக்கு மதுரைமாநகரே தலைநகராயிருந்திருக்கிறதென்றும், அதிலே தான் முதல், இடை, கடைச் சங்கங்களிளங்கினவென்றும் கேள்வியுற்றிருக்கிறோம். அதற்கிணங்க இக்காலத்திலும் திருவருள் மிகுந்து உலகமுழுமையும், பரவிவரும் நமது நக்ஷத்திர சங்கத்திற்குத், தமிழ் நாடுமுழுமைக்குமாகத் தலைநகராய் நம் நகரம் அங்கீகரிக்கப்பெற்றது மதுரை வாசிகளின் பாக்கியம்.

சென்ற ஏப்பிரல் மீ௳த்தில் அடையாற்றில் நடந்த நக்ஷத்திர மஹாசபையில் மதுரை ஹைகோர்ட் வக்கீலும் நமது பத்திராதிபருமான ஸ்ரீ அ. ரங்கஸ்வாமி ஐயரவர்களும் மதுரை ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீ கல்கத்தா ராமச்சந்திர ஐயரவர்களும், சேலம் பென்ஷனர் ஸ்ரீ முத்துசாமி ஐயரவர்களும், மதனப்பள்ளி உபாத்தியாயர் ஸ்ரீ ரங்காச்சாரியாரவர்களும், பிரஹ்மஞானசபை லாட்ஜ் இன்ஸ்பெக்

டர் ஸ்ரீ ஆர். சுந்தரராஜ ஐயரவர்களும், சோரத்துப்பெரியாங்குப்பம் ஸ்ரீ அ. நம்மாழ்வார் ஐயரவர்களும், கடலூர் ஸ்ரீ ஆர். சின்னசாமி அவர்களும், புதுக்கோட்டை ஆலங்குடியிலிருக்கும் ஸ்ரீ கே. எஸ். ராமச்சந்திர ஐயரவர்களும், முறையே அவரவர்கள் ஜில்லாக்களில் நமது சங்கத்தைப் பரவச்செய்ய, தமிழ்வகுப்பின் தலைச்சங்கத்தாரோடு சேர்ந்து வேண்டிய சகாயம் செய்வதாக ஒப்புக் காண்டிருக்கிறார்கள் என்று தெரியச் சந்தோஷிக்கிறோம்.

*
* *

மதுரைவாசிகளாகிய நம்மை அயலூரார் நன்கு மதித்திருக்கிறதற்குத் தக்கபடி நாம்நடப்பதே நமக்குக்கண்ணியதை. மதுரை வாசிகளாகிய நாம் ஆஸ்திகர்களானால். "ரிஷிகள் உலகத்தில் ஸ்தூலசரீரத்தோடு ஜீவன்முக்தர்களாயிருந்து உலக வியாபாரங்களை நடத்தி வருகிறார்கள். அவர்கள் எச்சமயத்திலும், எந்த உருவத்திலும் நமக்குள் தோன்றி தர்மோபதேசங்களைச் செய்வார்கள். அவர்களுடைய அபாரசக்தியை உத்தேசிக்கநம் சக்திகள்யாவும் புல்லியவேயாகும். இவ்விஷயத்தைக் கேட்டும் அலக்ஷியம் செய்யலாகாது." என்று உணரத்தக்க தெய்வ பக்தியுடையவர்களானால், அவர்களெல்லோரும் நம் சங்கத்திற் சேரட்டும். அத்தகைய பரமாசார்யரை வரவேற்கத்தக்க விதமாய், நந்நகரின் ஜனங்களுடைய மனோபாவங்கள் எப்படி யிருத்தல் வேண்டும்? அரசாட்சி முறைகளை எங்ஙனம்சீர் திருத்துவது? அறிவிலும் பணத்திலும் பரம ஏழைகளாயுள்ளோரை எப்படி முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது? நந்நகரின் முனிசிபாலிட்டி எத்தகைய விழிப்போடு பட்டணத்தின் சுத்தத்தையும் அழகையும் கவனித்தல் வேண்டும்? ஸகோதர பாவமும், அன்பும் பரோபகாரசிந்தையும், ஜனங்களுக்குள் எப்படித் தழைத்திருக்கச் செய்வது? நமது ஆலயங்களை எப்படி வைத்துக் கொள்ளவேண்டும் பூஜகர்களின் ஒழுக்கம் எப்படி இருத்தல் வேண்டும்? ஸ்திரீ தர்மம என்னென்ன? நந்நகர்க் குழந்தைகளைப் பரிபாலித்து வளர்ப்பதெப்படி இவைகளை யெல்லாம் தீரயோசித்து,

அவைகளை நாம் உடனே அநுஷ்டானத்திற் கொண்டு வருவோம். வீண் யோசனைக்கும், சமுசயித்திற்கும் நாம் இடங் கொடுக்கலாகாது. ஜீவகாருண்யத்தையும் பக்தியையும் அன்பையும் வளர்ப்போம். இடையூறுகளைப் பாராட்டாமல் பொதுநன்மையான காரியங்களில் கண்ணுங் கருத்து மாயிருப்போம்.

***

அயலூர்களிலும், கிராமங்களிலும் யார் யார் நமது சங்க விஷயமாய் உழைக்கத் தயாரா யிருக்கின்றனரோ அவர்களெல்லோரும் நமக்குக் கடிதமெழுதி வருவார்களானல், அவர்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொண்டு, அவர்கள் மூலமாய் யாம் தாராளமாய்ப் பிரசாரம் செய்வது இலகுவாகும்.

***

அடையாற்றில் நக்ஷத்திரச்சங்க சப்பந்தமாய்ப் பெறத்தக்க புத்தகங்கள், சாமான்கள் யாவும் இனி இங்குக் கிடைக்கும்படியும், தமிழ் மெம்பர் யாவரும் நேருக்கு நேரே கடிதங்கள் எழுதிக் கொள்ளும்படியும் சௌகரியம் செய்தற் பொருட்டு, மதுரையைத் தமிழ் நாட்டுக்குத் தலைநகராய் வைத்திருக்கிறது. ஆகையால் முன்னினும் பன்மடங்கு அதிகமான வேலையும் அதிகமான பணச்செலவும் ஏற்படக்கூடியது. இப்புதிய ஏற்பாட்டைப் பயன்பெற நடத்தும் வழிகளைத் தேடவேண்டியது அதியவசியம். பகவானுடைய வருகையைப்பற்றி, நாநாவித நோக்கங்களிலிருந்து நாநாவித நியாயங்களோடு பல தினுசு துண்டுப் பத்திரிகைகளைப் பிரசுரிக்கவேண்டி யிருக்கிறபடியால் நமக்குப்பணம் ஏராளமாய்த் தேவை. ஆத்மவித்தைக்குப் பணம்சத்துருதான். ஆயினும் அச்சத்துருவையும் நடத்துகிறபடி நடத்தினல், அதுவே நமக்குமிக்க அநுகூலமாயும் சாதகமாயு மிருக்கிறது.

இவ்விடத்தில் நமக்கு ஓர் நன்மாதிரி வேண்டுமானால், 40 வருஷங்களாய், மேன்மேலும் அபிவிர்த்தியடைந்து வந்திருக்கும் பிரஹ்மக்ஞானசபையைப் பார்த்துக்கொள்வோம். அதற்கு வருடச் சந்தா ரூ. 3 ஏற்படுத்தியிருப்பதுபோல நக்ஷத்திரமெம்பர் ஒவ்வொருவரும் வருஷச்சந்தா எட்டணா கொடுத்து வருவார்களானால் நமது காரியங்களை நலம்பெறச் செய்யலாம். இதற்கு நன்கொடையாகக் கொடுக்கப்படும் பெருந்தொகைகள் கொடையாளிகளின் பெயரோடு பிரசுரிக்கப்படும். மாதந்தோறும் நமது கணக்கும் இனிப் பூர்ணசந்திரோதயத்தில் பிரசுரிக்கப்படும்.

பி. எஸ். ராமசுப்பையர்,
காரியதரிசி, தமிழ் நாட்டு நக்ஷத்திரத் தலைச்சங்கம், மதுரை.

நன்மொழி.

அண்டங்க ளேழு மகண்ட மு மாவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைத்தனி ப்பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே.

பெண்ணில்ல வாணல்ல பேடல்ல மூடத்துள்
உண்ணின்ற சோதி யொருவர்க் கறியொண்ணாக்
கண்ணின்றி காணுஞ் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணற் பெருமையை யாய்ந்தது மூப்பே.

—திருமந்திரம்.

பகவத்பக்தியும் தேஜசும்.

(39-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இப்போது நாமிருக்குங்காலம் மகா மகிமையுள்ளது. ஏனெனில், கலியுகம் பிறந்து ஐயாயிர வருஷங்களாகின்றன. கலியுகத்தின் முதல் ஐயாயிர வருஷங்களின் காலச் சக்கரம் முடிந்து, இரண்டாவதாயுள்ள காலச்சக்கரம ஆரம்பித்திருக்கிறது. இது இந்த இரண்டு காலச் சக்கரங்களின் சந்தியா காலம். இவ்விதக் காலத்தில் ரிஷிகள் தங்களுடைய தவ சக்தியையும் தேஜஸையும் விசேஷமாய் ஜனங்களின் பரிசுத்தத்திற்காக வருஷித்து பக்தர்களிடம் தேங்கப் பண்ணுகிறார்கள். எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து சுதேச பாலர் பாலிகைகளுக்குத் தகுந்தபடி வித்யா பக்தி ஞானங்களை விருத்தி செய்யவேண்டும். இச்சந்தியா காலத்தில் ஜகத்தருவான ஒரு ரிஷி அவதரித்து, தம்முடைய சகாய குணத்தால் ஜனங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வருவார். பக்தி, நேர்மை, சாந்தம், பூததயை இவைகளை விருத்தி செய்யவேண்டும். இவ்விதம் செய்யின் திவ்விய தேஜஸை நாம் அதிகமாய் அடைவோம்.

விசேஷ ஊற்றுள்ள கால்வாயை அகலமாகவும் ஆழமாகவும் வெட்டின் ஜலம் விருத்தியாகுமல்லவா? அவ்வாறு நமக்கு பூததயை விஸ்தாரமாகி ஈசுவர பக்தி பலப்பட்டு நமது பரித்த தேஜஸ் விருததியாக ஆக லாந்தரிலுள்ள தீபத்தின் பிரகாசம் விருத்தியாக ஆக அதன் ஒளி மேன்மேலும் தூரமாக வியாபிக்குமாபோல் நமது தேஜஸ் மேன்மேலும் தூரமாக வியாபிக்கும். இக்காரணம் பற்றியே ரிஷிகளின் தேஜஸ் சில மைல்கள் வரைக்கும் வியாபித்திருக்கிறது. இவ்விதம் ரிஷிகளின் தேஜஸ் வியாபித்துள்ள பிரதேசத்திற்கு ரிஷியாசிரமமென்று பெயர். அவ்வித ஆசிரமத்தில் நாம் பிரவேசிக்கும் பொழுதே நமக்கு அவ்விடமுள்ள திவ்ய தேஜசு நம்மைத் தாக்கி நம்மிடம் சத்புத்தி, சாந்தம, பக்தி இவைகளை உண்டுபண்ணும். இதனாலே தான் ரிஷியாசிரமங்களில் புலி, மான், த்வேஷ பாவத்தை யொழித்துச் சிநேக

பாவத்துடன் உறவாடிக்கொண்டிருக்கும் என்று சொல்லு கிறார்கள்.

கங்கை முதலான மஹாநதிகளிலும், புண்ணிய க்ஷேத்திரங்களிலும், அனாதி தேவாலயங்களிலும் ரிஷிகளின் தேஜஸ் விசேஷமாக வியாபித்திருக்கும். ஏனெனில் பிள்ளைகளுக்குத் தனத்தைத் தேடி வைக்கும் பிதாவைப் போல் ரிஷிகள் தங்களுடைய தவசக்தியை இனிவரும் ஜீவர்கள் இவ்வித திவ்விய ஸ்தலங்களைச் சேவித்துப் பரிசுத்த தேஜஸை அடைந்து அவர்களும் பரிசுத்தர்களாகிப் பூர்ணர்களாக வேண்டுமென்பதாக மகாதயையோடு இவ்வித மஹா ஸ்தலங்களில் நிரப்பி வைத்திருக்கிறார்கள். இதனாலும் ஆகம உரைப்படிக்கும் மந்திரங்களின திவ்யபிரபாவத்தாலும் தேவாலயங்களில் பரிசுத்த தேஜஸ் நிறைந்திருக்கின்றது.

தேவாலயங்களில் பிரவேசிப்பவர்கள் மஹாபக்தியோடு பிரவேசித்து அங்கிருக்குங்காலம் முழுமையும் ஈசுவரனிடம் மனதை நிறுத்தி எல்லாரையும் பரிசுத்தர்களாகச் செய்ய வேண்டுமென்பதாகத் தியானித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இப்படிப்பட்டவர்களுடைய மனதிற் சாந்தம் உண்டாகும். தேவாலயத்திலிருக்கும் பொழுது காமக்குரோத எண்ணங்களைச் சங்கற்பித்தலும், துஷ்ட காரியங்களைச் செய்தலும், கெட்டபார்வை பார்த்தலும் கூடாது. அர்ச்சகர்கள் துஷ்ட சங்கற்பங்கள் ஜனித்து நடிப்பார்களேயாயின் அவர்களுக்கும் துஷ்ட தேஜஸ் விருத்தியாகி அவர்கள் அக்கினியில் விழுந்த விட்டிற் பூச்சிபோல் நாசமடைவார்கள்.

இக்காலத்தில்கூட காசிவிசுவேசுவராலயம் முதலான திவ்ய ஸ்தலங்களிலும் சிலபுண்ணிய க்ஷேத்திரங்களிலும் ரிஷிகள் சூக்ஷ்ம ரூபத்தோடு வந்து, குறைந்து போன பொக்கிஷத்தை நிரப்பும் தனிகனைப் போல் ஜனங்களின் நன்மைக்காக அவைகளில் தங்கள் தவசக்தியை நிரப்புகிறார்கள்.

தேவாலயத்தில் மூன்று வாசல்களுக்குள்ளே விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. ஜீவனுடைய ஸ்தூல சூக்ஷ்ம காரணங்களென்ற மூன்று உபாதிகளைக் கடந்த பின்னர் தான் ஈசுவர ஸன்னிதானத்தை அடைவானென்பதை இதுசூசிப்பிக்கின்றது. தீபமில்லாத தேவாலயத்தைப் போல் தேகத்ரயமாலின்யவிருள் சூழ்ந்த ஜீவன் சர்வ ஜீவர்களின் ஹிருதயத்திலும மறைந்திருக்கும் நாராயண மூர்த்தியைக் காணமாட்டான். ஸ்தூல சரீரமாலின்யம் சாத்விக ஆகாரத்தாலும், சூக்ஷ்ம சரீரமாலின்யம் காமக்குரோதாதி நாசத்தாலும, காரண சரீரமாலின்யம் அகங்கார நாசத்தாலும் பூததயை அப்பியசிப்பதாலும் நீங்கும். ஆகையால் நாம் இவற்றை முக்கியமாக அப்பியசிக்க வேண்டும்.

ஜகத்ரக்ஷகமானதும், மோக்ஷப்பிரதமானதுமாயுள்ள பரிசுத்த திவ்யதேஜஸை அடைவதற்கு வேண்டிய சிரத்தை, பக்தி, நிஷ்டையையும், பூததயையையும், ஜகத்குருவானவர் சீக்கிரத்திலேயேபூலோகத்தில் அவதரிப்பாரென்ற நம்பிக்கையையும் ஜகதீசுவரன் நமக்கு அளிப்பாராக.

A. நஞ்சுண்டப்பா B. A. B. L.

நன்மொழி.

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினை கெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரேற்
கள்ளமன முடைக் கல்வியில்லாரே.

—திருமந்திரம்.

உள்ளத்தி னுள்ளே யுணரு மொருவனைக்
கள்ளத்தி னாலுங் கலந்தறி வாரில்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பத்தலுள்ளாமே.

—திருமந்திரம்,

அங்கம் 4. களம்—3.

(30-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலம்—காலை. இடம்—பிருந்தா வனத்தையடுத்த ஓர் வனம். நாடகப் பாத்திரம்—அக்பர் (ஸாது வேடத்துடன்)

அக்.—நான் கிருஷ்ணாலயத்துக்குச் சென்று மகர கண்டிகையை மீராபாயிடம்கொடுத்ததாலல்லவா இவ்வளவு துன்பங்களிவளுக்கு நேரிட்டன? இவளைத் திரும்பவுமவள் பதியிடத்தில் சேர்த்துவைக்க வேண்டியபொறுப்பு என்னுடையதாய் விட்டது. நான் ஆக்ராவிலிருந்து சகல சமாசாரங்களையும் கவனித்து வந்திருக்கிறேன். மீராபாய்இப்போது இங்கேயிருக்கிறாளென்பதையு மறிந்தேன். அவளிடத்தில் சுந்தரீபாய் வந்து சேர்ந்ததையும் தெரிந்துகொண்டேன். கும்பாஜி ராணாவும் தன் சித்தப்பிரமைதீர்ந்து தான் செய்ததைக் குறித்து நினைத்துருகி, இனி மீராபாயில்லாமல்ராஜ்யத்திலிருப்ப தில்லையென்று தீர்மானித்து தன் ராஜ்யத்தை மந்திரியிட மொப்புவித்து விட்டு மீராபாயைத் தேடப் புறப்பட்டுக் கொஞ்ச காலமாய்விட்டதென்பது மெனக்குத் தெரியும். அவன் சென்றவழியைக் கவனித்துப் பார்த்ததிலிந்நகரைநோக்கி வந்திருக்கிறதாகத் தான் தெரிய வருகிறது. மாறுவேடம் பூண்டிருக்கிறானாம். என்ன மாறுவேடம் பூண்டாலென்ன? என்னுலதையறிய முடியாமற்போகுமா? என்னை யிக்கோலத்தில் அக்பரென்று கண்டுபிடிப்பது கஷ்டம். நானின்னும் கொஞ்சகாலத்துக் கிந்நகரத்துக்கு சமீபத்திலேயே இருக்கிறேன். கும்பாஜி சீக்கிரத்திலிங்கே வருவான். (மறைகிறான். சற்றுப் பொறுத்து கும்பாஜி வருகிறான்.)

கும்.—(பாடுகின்றான்)

ராகம்-தீரசங்கராபரணம்: தாளம்-சாப்பு

பாழாயென் வாழ்வினைக் கழித்தேனே—படு
பாபம் செய்து சுக மொழித்தேனே.
சொலையாளி யிருவரை விட்டேனே—அவர்
நிலைமாறித் தொண்டராய் விட்டாரே.
பொல்லா அரவம் கொல்ல விடுதேனே—அதை
கொல்லாமல் சிரந்தன்னில் முடித்தாளே.
யமுனைவிழுந்து மாளத் துணிந்தாளே
யமனுமவளைக்கண்டு பணிந்தானே.
உலகமுடைய அன்னை வந்தாளே—அவள்
திலகமாய்ப் பொலிந்தெழத் தந்தாளே.
மதியிழந்திவ்விதம் கெட்டேனே—இவ்
விதி யென் தலையிலீச னிட்டானே.

ராஜ்யத்தை விட்டுப்புறப்பட்டு சுமார் ஆறுமாத கால மாகிறது. அப்பொழுது தொடங்கி சரியான ஆகாரமில்லா மலும் நித்திரையில்லாமலு மலைந்து திரிந்து கடைசியிலிந்த பிருந்தா வனத்திலவள்—ஐயோ, அவளென்றுதான் சொல் ல வேண்டி யிருக்கிறது. என் பத்நியென்றுரைக்கவுமெனக் குப் பாத்தியமுண்டா? மூன்றுதினங்களாக நானிங்கேயிருக் கிறேன். மீரா கிருஷ்ண கிருஹத்துக்குப் பக்கத்திலிருக்கும் சத்திரத்தி லிருக்கிறாளென்பது மெனக்குத் தெரியும். அவள் காலில்விழுந்தவள் மன்னிப்பைக் கேட்பதென்று லெனக் கென்னவோ அச்சமாயிருக்கிறது. திரும்பவு மவ ளென்னை யங்கீகரிப்பாளா?—சீ, அவள் விஷயத்தில் நா னிப்படிப் பயப்படுகிறேனே. ஆயினும் நான், அவளுக் காதி முதல் கணக்கில்லாத தீமைகளை விளைவித்துக் கொண்டு வந்த இந்தப்பாபி, வெட்கமில்லாமல் திரும்பவுமவள் முகத் தில் விழிப்பதெப்படி? அங்கேபோக வேண்டுமென்று புறப் படுகிறேன், கால்களெழும்ப மாட்டோமென்கின்றன. கால்க ளெழும்பினல் மனது போகவேண்டா மென்கின்றது. இந்த தர்ம சங்கடத்திலகப்பட்டுக் கொண்டு இம்மூன்றுதினங்

களாக படும் துயரந்துக் களவேயில்லை. நான் முன்பட்ட துயரமிதற் கெதிரில் மறைகின்றதே. ஐயோ, என் கண்மணி யிருக்கு மிடத்தையடைந்து மவளருகில் செல்ல எனக்குத் தைரியமில்லாமற் றவிக்கிறேனே. இதையெல்லாம் யாரிடத் திலாவது வாய்விட்டுச் சொல்லிக்கொஞ்சமாறுதல் பெறலா மென்றாலோ, காஷாயவுடை தரித்திருக்கும் நானிவ்விஷயங் களைப் பற்றி யாரிடத்தில் பேசுவது? எனக்கொன்றும் தோன்றவில்லையே.

(அக்பர் வருகிறான்.)

அக்.—(தனக்குள்) இதோ கும்பாஜி ராணாவே வந்திருக் கிறாரே. (கிட்ட நெருங்குகிறான்.)

கும்.—(தனக்குள்) நானிப்படி யோசித்துக்கொண்டிருந் தால், இதோ ஒரு ஸாது வருகிறாரே—அவரைப் பார்த் தால் பரமஸாத்விகர்போல் காணப்படுகிறார். என் மனம் பொறுக்கவில்லை. அவரிடத்திலாவ தென் மனதைத் திறந்து பேசி நானாறுத லடைகிறேன்.—ஸ்வாமீ, நமஸ்கரிக்கின் றேன். (வணங்குகிறான்.)

அக்.—சாந்தியடைகுவாயாக. அப்பா, (உற்றுப்பார்த்து) உன் முக மிவ்வளவு வாடியிருப்பானேன். உனது கண்கள் தாழ்ந்து சிவப்பாயிருப்பானேன். ஏதோ வியாகுலங்கொண் டுருப்பதாகத் தோன்றுகிறதே. துறவறத்தைமேற்கொண்ட டினக்கிது சரியோ, நீ கண்ணீர் விடலாமோ, வியாகுலம் கொள்ளலாமோ? சீதோஷ்ண சுக துக்கங்க ளுன்னைப் பா திக்கக் கூடாதே. சமீபததில் தான் துறவியானாயோ?

கும்.—ஸ்வாமீ, உம்மைப் பார்த்தது முதலே உம்மி டத்திலெனக்கு நம்பிக்கையுண்டாய் விட்டது. உம்மிடத்தி லுண்மையை யுரைப்பதி லொரு கெடுதலு மில்லையென்று தோன்றுகிற தெனக்கு.

அக்.—அதைப்பற்றி சந்தேகம் வேண்டாம். நீயுரைக்க விரும்புகிறதை யுரைக்கலாம்.

கும்.—ஸ்வாமீ, காரியார்த்தமாக நானிவ் வேஷம் பூண்டேனே யல்லாது உண்மையிற்றுறவி யல்ல நான்.

அக்.—உன்னைப் பார்த்தபொழுதே யெனக்குச் சந்தேகம் தோன்றிற்று. ஆகவே நானுன்னிட மக் கேள்வியைக் கேட்கலுற்றேன். யாது காரணம் பற்றி நீ யிவ்வுடை தரித்தனை?

கும்—ஐயா, நானொரு தேசத்துக் கதிபதி.

அக்—அப்படியா?

கும்—அப்படி யிருந்து மென் மதியை யிழந்து மஹா பாபியானேன்.

எனது சரித்திரத்தைக் கேளுங்கள்.

(பாடுகிறான்—நொண்டிச் சிந்து)

தயையுள்ள பெரியவரே—நான்
தான தர்மம் தவறுமற்றரணி தன்னைத்
தாங்கி வந்த நாளையிலே—எனக்
கிருவர்களுண்டாம் பாரியைகள்.
ஒருவள் சுந்தரி பாயாம்—மற்றவள்
மீராபா யென்றுலகோர சீராய்ப் புகழும்,
மருவற்ற பக்தியுடையாள்—அவள் மீது
பொறாமை கொண்ட சுந்தரியு மெந்தன்
புத்திதனைப் பாழடித்து—பொய்யான
பழிகளையும் கொடிய தொழில்களையும்,
மீராபாய் மீது சாற்றி—நான்
கொஞ்சமேனு மென் மனதி லஞ்சாமலுமே,
கொலையாளிகளின் கையினும்—அவளைக்
காட்டிக் கொடுக்கக் கோபம் மூட்டி விட்டன—வந்த
கொலையாளி யிருவர்களும்—தங்கள்
குல தர்மத்தைத் துறந்து நிலைமாறி,
சாலவே யெங்கிலம் விட்டோடி—இந்நகரில்
சர்வ ஜனங்கள் புகழ் நல்வர்த்தகராய்ச்
சிறப்படைந்திருக்கிறார்கள்—பிறகு

மறுபடி தூண்டப் பெற்றே யரவங்களை,
மாலையென்று மனுப்பினேன் யான்—அதை
மாலை யென்றணிந்துமது சாலமே யவளுக்குக்
குடை பிடித்ததைக் கேளும்—அதைக்
கேட்டு அடங்காக் கோபம் மூட்டப் பெற்றுத்தற்
கொலை செய்து கொள்ளும்படிச்கு—உத்தரம் நான்
கொடுத்தனுப்பவளதற்குடன பட்டுமே யவள்
பக்கத்திலுள்ள யமுனையின்—நடு
பாலத்தினின்று குதிக்க ஜல வெள்ளத்தில்
ஆவிர்ப்பவித்தாளே தேவி—அவளால்
ஆசீர் வதிக்கப்பட்டு மாசற்றவளாய்
நாடுதோறு மலைந்து சென்று—ஜனங்களுக்கு
நாலு வேதாதீதனை நாராயணனை
நாடும் வழி தேடவும் செய்து—அவளிடம்
போதமடைய வேண்டியவள் பாதமடைந்து
பரிதபித்த சுந்தரியோடு—வசிக்கிருள்.
நேரில் சென்றவள் மன்னிப்பைக் கோரலாமென்று,
நாடு நகரங்கள் துறந்து—இம்மணியை
நாடியே யென்தன் மனம் ஊடியே நிற்க,
துறவித் துயிலை யுடுத்தேன்—அந்த
தீனதயாளு தானெந்தன் மன மடங்க
தயை புரியவேண்டும்—ஈசன்—தயை புரியவேண்டும்.

அக்.—அப்பா, நீ தான் கும்பாஜிராணுவோ? சரி, போனது போகட்டும். இனி நீ பேன் தாமதிக்கவேண்டும்? அந்தச் சத்திரத்துக்குச் சென்று மீராபாயைக் கண்டு கொள்ளேன்.

கும்.—அதைச் செய்யத்தானென் மனம் துணியாது, ஒரு பக்கத்தில் சந்தேகமும், ஒரு பக்கத்தில் வெட்கமும், ஒரு பக்கத்தில் பயமும் என்னை யங்கு செல்லவிடாமற் றடுக்கின்றன.

அக்.—அப்பா, அந்தப் பக்தை விஷயத்தில் நீ பயப் படவேண்டியதொன்றுமில்லை. நான் சொல்லுகிறேன் கேள்.

கும்.—அப்படியானல் நானங்கே செல்லட்டுமா? நீங்கள் தைரியம் கொடுக்கிறீர்களே. நான் படும் துயரத்தைத்

தாண்டத் தங்கள் மொழிகள் ஒரு வங்கம் போலு மிருக்கின்றன.

அக்.—அவளை நீ மன்னிப்புக் கேட்பதா லுனக்கொரு குறைவு மேற்படாது. அவளைச் சந்திப்பதற்குத் தருந்த சமயம் சொல்லுகிறேன் கேள். நானிந் நகரில் கொஞ்சகாலம் வாசம் பண்ணுவதாலது எனக்குத் தெரிய வந்தது. அந் நாரீமணி தினந்தோறும் காலையில் கிருஷ்ணாலயத்துக்குச் சென்று அங்கே தானும், தன்னோடு கூட இருக்கும் தன்னைப்போ லழகு வாய்ந்த ஒரு ஸ்திரீயுமாக பஜனை செய்து விட்டுத் திரும்பி சத்திரத்துக்கு வருவாள். அப்போது நீ யவளைக் காண்பது நலமென் றெனக்குத் தோன்றுகிறது.

கும்.—அப்படியானா லிப்பொழுதே யங்கு போகலாமோ?

அக்.—போகலாம். இது நல்ல சமயம் தான். நீ புறப்படு. சற்றுப் பொறுத்து நானு மங்கே வருகிறேன்.

கும்.—தாங்களும் வருகிறீர்களா? ரொம்பவும் சந்தோஷம். நான் முன் போகட்டுமா?

அக்.—அப்படியே.

(இருவரு மிருபுறமாகப் போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ.

பக்தி.

—

सचिंत्य अव्यक्त अनंत अव्ययं ।
विष्णुं प्रभुं भावित विश्वभावनं ॥
त्रैलोक्य विस्तारविचार कारकं ।
हरिं प्रपन्नोऽस्मि गतिं महात्मनां ॥

இப்புண்ய பூமியிலுள்ள ஸகல மானிடர்களும் முக்கியமா யடைய வேண்டியதாகிய மோக்ஷத்திற்கு, அநேக சாதனங்களிருப்பினும், அச்சாதனங்களில் மிகச் சிறந்தது பக்தியேயாம். இவ்வுத்தம சாதனத்தைப் பற்றி ஸ்ரீமகா விஷ்ணுவானவர் பக்தராகிய கருடாழ்வாருக்குப் புகழ்ந்து கூறினர்.

तपोयोगादयो [illegible] तथापि च ।
[illegible] भक्तिः [illegible] ॥

ஸம்ஸாரக் கடலில் மூழ்கியிருக்கின்ற ஜீவர்கள், மோக்ஷத்தைப் பெறுவதற்கு தபசு, யோகம், தானம் முதலிய பற்பல மார்க்கங்களிருக்கின்றன. அவற்றில் என் பக்தி தான் நன்மையாகிய மார்க்கமென்றும்;

ज्ञानतीर्थतपोयज्ञ[illegible] ।
[illegible] हरिसेवायां भक्तिः [illegible] गरीयसी ॥

தானம் தபசு யாகம் முதலிய எல்லா நற்கருமங்களும் எந்தக் காலத்திலும் ஈசுவர ஸேவைக்கு அங்கங்களே யானும் பக்தி ஒன்றே மிகச சிறந்தது என்றும் கருட புராணத்தில் கூறப்படுகின்றன. இவ்வுத்தம பக்தியைச் சாதிக்கும் விஷயத்தில், ஜாதி, வர்ணாசிரமம், வித்தை, பௌருஷம், ஐசுவர்யம் முதலிய எவ்வித யோக்கியதையும் வேண்டுவன வல்லவென்று பாகவதம் ஸ்ப்தமஸ்கந்தத்தில் அஸுரகுமாரர்களுக்குப் பிரஹ்லாதர் உபதேசித்திருக்கின்றார்.

नालं द्विजत्वं देवत्वं ऋषित्वं वासुरात्मजाः ।
प्रीयतेऽमलया भक्त्या हरिरन्यद्विडम्बनं ॥

ஸத்குலத்தில் பிறந்து பிராமணனாகவும் தேவதையாகவும் ரிஷியாகவும் விசேஷ ஞானமுடையவனாகவும் இருத்தல் போதாது. ஸகல சக்தி சாமார்த்தியங்களும் பகவத் பக்தி யில்லாவிடில் உத்தம சிரேயஸைக் கொடுப்பதாகிய ஈசுவரப் பிரசாதத்திற்குக் காரணமாகமாட்டா. நிர்மலமாகிய பக்தி ஒன்றுமாத்திர மிருக்குமாகில், ஜகதீசன் ப்ரீதியுடன் கிருபை செய்வார். பக்தி மாத்திரமில்லாமல் மற்ற யோக்யதைகளைப் பெற்றிருத்தல் வீண் டம்பமேயாம்.

வ்யாயஸ்யாவரணம் யுருவஸ்யவ வயொ விஷ்யாமஜெஜம்
ஶுஸ்யகா। காஜாதிவிமுஷாஸ்ய யாஉவவடெதஹ்ரு
ஸ்ய கிம்வெளஷம்॥ குஸ்ஜாயாஃ கஉநீயரூவஉயி
கம் கிம் தஸ்யாஜெ நாய நம்।ஹக்த்யா தஷ்யதி கெஶவொ
நதவவெஜஹுஜெக்ஷக்த்யஃ வஹஃ॥

மிகவும் துராசாரனாகிய வேடன், சிறு பாலகனாகிய த்ருவன் திர்யக் ஜெந்துவாய் ஞானமில்லாத கஜேந்திரன், ஹீனகுலத்திலுண்டான விதுரன், இடையர் குலத்தில் பிறந்து பராக்கிரம மில்லாத உக்கிரஸேனன் குரூபியாகிய குப்ஜை என்கிற ஸ்திரீ, மிகவும் தரித்திரரான குசேலரென்கிற பிராமணன் இவ்வுத்தம பக்தர்களெல்லோரும் சிநேஹ ரூபமான பக்தியினாலேயே பகவானைச் சந்தோஷிக்கச் செய்தனரே யொழிய, வேறே எவ்வித உபாயத்தினாலு மல்லவென்று யாவரு மறிந்த விஷயமே. இவ்வுத்தம பக்தியைப் பெற்ற புண்ய புருஷர்கள் ஸித்தர்களாகவும் அமிருதாகளாகவும் திருப்தர்களாகவும் சாந்தர்களாகவும்

யநாநிஜீவிதம்வெவ வாஶாயெ வராஜு உஸ்ரஜெக

என்கிற நீதி வாக்கியத்தின்படி லோகோபகாரத்தின் பொருட்டு பூமியில் சஞ்சரிப்பார்கள். தவிரவும் இவ்வுத்தமர்கள் ஒரு பொருளையும் விரும்பார்கள். ஒருக்காலும் சோகத்தை யடையார்கள். ஒருவரையும் துவேஷிக்கார்கள். பலத்தைக் கருதி ஓர் கருமத்தையும் செய்யார்கள். அற்ப சுகங்

களில் ரமிக்கமாட்டார்கள். ஆத்ம ரூபியாகிய கடவுளின் திருஉருவத்தில் எப்போதும் ரமித்துக் கொண்டேயிருப்பார்கள். உன்மத்தரைப்போல் ஸ்திரமாய் ஆனந்திப்பார்கள். கண்ணால் கண்ட யாவையும் ஈசுவர சொரூபமென்று பாவனை செய்து சந்தோஷிப்பாகள். தங்கள் உபாசனு மூர்த்தியான ஜகதீசனிடத்தில் உடல், பொருள், ஆவி முதலியவற்றைச் சமர்ப்பிப்பார்கள். இவ்வித பக்தியையே ஸ்ரீ நாரத பகவான்

ஸா த்வஸ்மிந் பரமப்ரேமரூபா ॥

'திவ்ய மங்கள ரூபியாகிய பகவானிடத்தில் சிலாக்கியமான பிரேமையே பக்தி' யென்றார். பின்னும்

தத்விஸ்மரணே பரமவ்யாகுலதா ॥

'உலக வியாபாரங்களில் ஈடுபட்டு ஒருக்ஷண நேரம் தங்கள் தியேய மூர்த்தியை மறந்திருந்த பக்த சிரோமணிகள் அடுத்த க்ஷணத்திலேயே மறந்ததைப் பற்றி துக்கிப்பார்கள்' என்றார். இவ்வித பக்தர்கள் ஒன்பது பெயர்கள் நவவித பக்தியைச் சாதித்துப் புகழடைந்தார்கள்.

பரீக்ஷிச்ச்ரவணாத்ருஷி: கீர்த்தநாந்நாரதச்சுக: |
ஸ்மரணாச்சைவ ப்ரஹ்லாதோ லக்ஷ்மீ: பாதஸேவநாத் |
அர்ச்சநாத் ப்ருதுராஜச்ச அக்ரூரோ வந்தநாதபி |
தாஸ்யாத்தநூமாந் ஸக்யாதர்ஜுநஸ்ஸர்வ
தைத்யாநாம் சக்ரவர்த்தீ பலிராத்மநிவேதநத: ॥

சிரவணத்தால் பரீக்ஷித்தும் கீர்த்தனத்தால் நாரதரும் சுகரும், நினைத்ததால் பிரஹ்லாதரும், பாத சேவையால் லக்ஷ்மணனும், அர்ச்சனையால் பிருதுவும், வந்தனத்தால் அக்குரூரரும் ஊழியத்தால் ஹநுமானும் சினேகத்தால் அர்ஜுனனும், தன்னையே அர்ப்பணம் செய்ததால் பலியும் முக்தரானார்கள். சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம் அர்ச்சனை, வந்தனம், தாஸ்யம், சக்கியம், ஆத்மநிவேதனம் என்கிற ஒன்பது வித பக்தியாலும் ஒன்பது பக்தர்கள் முக்தர்களானார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்

தில் சாமானிய ஜனங்கள் யாவரும் தமக்குச் சுகத்தைத் தரக்கூடிய பதார்த்தங்களையும் இதரப் பிராணிகளையும், சிநேகிக்கிறார்கள். உத்தம குணத்தையுடைய ஒரு ஸ்திரீயானவள் தனது புத்தி, யுக்தி, சக்தி, சாமார்த்தியங்களால் சிரமப்பட்டு எப்போதும் தனது அன்பிற்கும் சுகத்திற்கும் பாத்திரமான தன் புருஷனைத் திருப்திச் செய்விக்கிறாள். அப்படியே ஒரு புருஷனும் தன் சகல சக்திகளாலும் திரவியத்தினாலும் தன் ஸ்திரீயை ஸந்தோஷிக்கச் செய்வான். ஸ்திரீ புருஷர்களின் அன்பைக் காட்டிலும் அனேக மாயிரம்மடங்கு பிரேமையைப்பக்தன் பரிபூர்ண தயாரூபியும் ஸர்வமங்கள குணங்களுடையவருமான தனது உபாசனாமூர்த்தியினிடத்தில் சமர்ப்பணம் செய்வான். அவ்வித பக்திரூபமான சிநேகத்தை எவ்வளவு காலம் அனுபவித்தாலும் அது மேன்மேல் விருத்தியடையுமே யொழிய ஒருநாளும் விராகமுண்டாக மாட்டாது. இவ்விஷயம் அனுபவத்தாலன்றி இத்தன்மையுள்ளதென்று ஊகிக்கச் சாத்தியமானதல்ல. ஐஹிக சுகங்களைத் தருகின்ற பதார்த்தங்களில் பாராட்டுகின்ற சிநேகத்தையே காலக்கிரமத்தில், சாது சகவாசத்தாலும், ஸத்கர்மானுஷ்டானத்தாலும், பலனைக் கருதாமல் ஒழுகலானும், கொஞ்சம் கொஞ்சமாய் ஈசுவரனிடத்தில் பிரேமையாக மாற்றவேண்டியது. ஐஹிக பிரேமையானது பாரமார்த்திகமாகி ஈசுவர பக்தி என்ற பெயரோடு மோக்ஷ ஸாதனமாய் முடிகின்றது. இவ்விதமான பக்தியைத் தான் ஸ்ரீ சங்கராசாரியர்களும் மிகவும் சிலாகித்து

மோக்ஷஸாதநஸாமக்³ர்யாம் ப⁴க்திரேவ க³ரீயஸீ

மோக்ஷ ஸாதனங்களில் பக்தி தான் மிகவும் சிரேஷ்டமானதென்றார்கள்.

ஸக்²யயோகா³த்³யவித்³யாஶ்சைவ ப⁴க்த்யை ப்ரோக்தாய கேவலம் ।
ஸாக்ஷாந்நாஸேவிப⁴க்திஶ்ருதிஸ்யாந்நித்யஸ்வரூபிணீ ॥

ஸமஸ்தமான ஸாதனங்களும் தருமங்களும் கருமங்களும் பக்தியுண்டாவதற்குச் சாதனங்களே யொழிய வேறில்லை.

முக்தியை யடைந்தவர்களுக்கும் பக்தி தான் நித்தியானந்த ரூபமாகின்றதென்றேற் படுகின்றது. இவ்வித பக்தியைப் பெற்று ஜீவன் முக்தர்களாய் விளங்கும் மகான்களை யுத்தேசித்து ஒரு கவி வர்ணித்தார் ஒரு காவியத்தில்

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

வேதங்களில் கூறியுள்ள கருமமார்க்க, ஞானமார்க்கங்களை லோகோபகாரத்தின் பொருட்டு நடத்திக் காண்பிக்கவும் அம்மார்க்கங்களை நிர்வகிக்கவும் நிர்மலர்களான எவ்வளவோ மகான்கள் இக்கலியுகத்திலும் புண்ய பூமியாகிய இவ்வுலகத்தில் தாமாகவே தோன்றி உலகத்திற்குதவி வருகின்றனர். அவர்களின் சுபாவம் எப்படிப்பட்டதெனில் பாப பரிபூர்ணர்களும் கருவத்தை யடைந்தவர்களுமான பிரபுக்களின் தயவில் ஆதரவற்றவர்களாகவும், கமலக் கண்ணனாகிய ஸ்ரீ நாராயணமூர்த்தியினுடைய (கமல நயனரென்பது சிவபிரானுக்கும் பொருந்தும்) ஸ்வேச்சை விளையாட்டுக்குப் பங்களா போன்ற தமதுள்ளத்தை யுடையவர்களாகவும் அமைந்த சுபாவத்தையுடைய புண்ணிய புருஷர்கள் மகான்களுடைய பிரபாவத்தைக் கூறிய இக்கவியின் வாக்கை உண்மையாக்கி, நம் போன்ற சாமானியர்களின் சந்தேகத்தை நீக்கும்பொருட்டே நம் பிரஹ்மஞான சபையோர்கள் நெல்லிக் குப்பத்தில் கூடிய பெருங் கூட்டத்தில் வந்து தோன்றிய மகான்கள் தங்கள் தங்கள் சிரமத்தையும் கார்யாந்தரங்களையும் கொஞ்சமும் கருதாது தரித்திரர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு மேகங்கள் மழை பொழிவதுபோல ஞானஹீனர்களான நம் போன்ற மூடர்களுக்கு விவேகம் வைராக்கியம் பக்தி ஞானமென்கிற பயிர்கள் தழைத் தோங்கும்படி தம்முடைய வாக்கினால் அமிருத

மழை பொழிந்து அனேகர்களுக்கு ஆனந்தத்தை யுண்டாக்கி உலக மேன்மையே தங்கள் முக்கிய பிரயோஜனமாக எண்ணி ஆனந்தித்தனரே, இவர்களே மகான்களென்றும் பரம பக்தர்களென்றும் லோகோபகாரிகளென்றும் சுயநலம் பாராத உத்தமகுண சீலர்களென்றும் உலகத்திலுள்ள உத்தம விவேகிகள் கூறுவார்கள்.

உலகத்தின் மேம்பாட்டிற்கென்றே கடவுள் தற்காலம் கிருபை செய்யப் போவதாய் அம்மகான்கள் சொன்னார்கள். அககடவுளின் திருக்கூற்றே இவ்விதம் தமது குழந்தைகள் பாமரர்களாய் ஸம்ஸாரக் கடலில் மூழ்கிய நம் போன்றவர்கள் கடைத் தேறவேண்டிய கிருபையினால் இம் மகான்களின் அந்தரங்கத்தில் குடிகொண்டு உலகத்தில் உலவுகின்றது.

கிருபாநிதியாகிய ஜகதீசனது குணாதிசயங்களைப்பற்றி ஒரு பக்தர் சொல்லுகிறார்.

அஸிதகிரிஸமம் ஸ்யாத் கஜ்ஜலம் ஸிந்துபாத்ரே ।
ஸுரதருவரஶாகா லேகநீ பத்ரமுர்வீ ॥
லிகதி யதி க்ருஹீத்வா ஶாரதா ஸர்வகாலம் ।
ததபி தவ குணாநாமீஶ பாரம் ந யாதி ॥

கறுப்பு நிறமான ஒரு பர்வதத்தினளவு மையை சமுத்திரமாகிற ஒரு ஜல பாத்திரத்தில் கரைத்து க்ஷீணிக்காத தேவவிருக்ஷத்தின் கிளையை எழுதுகோலாகக்கொண்டு விஸ்தாரமுள்ள இந்த பூமியை காகிதமாகக் கொண்டு ஸரஸ்வதியானவள் ஓய்வின்றி எழுதுவாளாகிலும், ஹே! ஈசா! உமது திவ்விய குணங்களைச் சொல்லி முடித்தல் முடியாது என்று துதித்தார்.

ஆகையால் நம் போன்ற சாமானியர்கள் யாவரும் கருணைக் கடலாகிய ஜகதீசனைச் சரணமடைந்து மேலே சொல்லிய மகா புருஷர்களைப் போல பக்தி முதலிய பாக்கியங்களைப் பெற்று நாமும் அவர்களைப் போல லோகோபகாரத்தின் பொருட்டு இச்சரீரத்தைப் பிரயாச மடையச்

செய்து ஈசனது கிருபைக்குப் பாத்திரர்களாகி ஜன்மசபலத்தைப் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

வாஸுதேவஸ்ய யே பக்தா: சாந்தாஸ் தத்கதமானஸா: ||
தேஷாம் தாஸஸ்ய தாஸோஹம் பவே ஜன்மனி ஜன்மனி ||

ஸோஹம்—ஸோஹம்—ஸோஹம் ||

சாந்தர்களாயும் வாசுதேவனிடத்தில் ஈடுபட்ட மனத்தர்களாயும் உள்ள பக்தர்களுடைய தொண்டர்களுக்குத் தொண்டனாய் ஒவ்வொரு ஜன்மத்திலும் இருப்பேனாக.

சுப்பிரமணிய சாஸ்திரி,
ரேட்டியூர், லாட்ஜ் மேம்பர்.

சமாசாரம்.

1. **மதுரையில் வெண்தாமரை நாட் கொண்டாட்டம்:—** சென்ற மே மாதம் 8உயன்று நமது பிரஹ்மக்ஞான மந்திரம் தாமரைகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டது. ஸ்ரீ பிளவாட்ஸ்கி அம்மையாருடைய படமும் ஸ்ரீமான் ஆல்காட் அவர்களுடையபடமும் தாமரை மலர்களால் மாலைசூட்டப்பட்டு சபை முன்னர் வைக்கப்பட்டிருந்தன. முதன்முதலாக மாலை 6 முதல் 6—30 மணிவரை ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்தி பண்டாரச் சந்நிதியவர்கள் ஆதீனம் ஓதுவாரவர்களால் தேவார பஜனை நடத்திப், பிறகு உபநிஷத்து தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரங்களின் பாராயணம் நடந்தது. பகவத்கீதை, தாயுமானவர்பாடல், அருட்பா, ஆசியதீபமென்னும் புத்தசரித்திரம், ஜைனசூத்திரம். கொரான், ஸெண்ட் அவெஸ்டா, பைபிள் எல்லாவற்றினின்றும் முக்கிய பாகங்களைத் தேர்ந்தெடுத்து அங்கத்தினர் பலர் வாசித்தார்கள். அன்று வந்திருந்த கோயம்புத்தூர், ரிடையர்டு தாசில்தார் ஸ்ரீமான் தி. மீநாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் ஸ்ரீ பிளவாட்ஸ்கி அம்மையாருடன் சம்பாஷித்த சிற்சில விஷயங்களை எடுத்துக்கூறி அம்மையார் பிரபாவத்தை வெளியிட்டார்கள் நமது பிரஹ்மக்ஞான ஸபையில் சிரேஷ்டராய் விளங்கிக் காலஞ்

சென்ற வேறு பல சகோதரர்களையும் உத்தேசித்து இத்தினம் பொதுவாகவும் சிறப்பாகவும் கொண்டாடப் படுகிறது என்று வேறொருவர் கூறினர். கடைசியாக தீபாராதனையோடு உற்சவமமுடிவு பெற்றது. சபை அங்கத்தினரான ஸ்ரீமதி ஒருவர் தமது நண்பர்களான வேறு சில பெண்மணிகளையும் அழைத்துவந்து ஸபையை அலங்கரித்தார். அன்று மாலை 500-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு வயிறார அன்ன மளிக்கப்பட்டது.

---

2. திருமியச்சூரில் வெண்தாமரைநாட் கொண்டாட்டம்:— சென்ற மேமீ 8உயன்று வழக்கப்படி இத்தினம் விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. சுமார் 150 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. அன்று சாயங்காலம் பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர் பலரும், சபையின் அபிமானிகளான பலரும் கூடி பகவத்கீதை, எட்வின் ஆர்நால்டு அவர்கள் இயற்றிய "ஆசியதீபம்"என்னும் புத்தசரித்திரம், இவைகளினின்று அரியகட்டங்களை எடுத்துப் படித்தனர். காரியதரிசியவர்கள் தமிழில் ஸ்ரீஹெலிநாம்பாளம்மையார் சரித்திரத்தை சுருக்கமாய் உபந்யஸித்தார். சபையின் அங்கத்தினர்களான சில ஸ்ரீ மதிகளும் வந்திருந்தனர்.

---

3. பொள்ளாச்சியில் வெண்டாமரைநாட் கொண்டாட்டம்:— இந்த வருஷம் வெண்டாமரை நாள் உற்சவம் இவ்விடம் வெகு நேர்த்தியாய் நடைபெற்றது. ஆயிரத்துக்கு மேல்பட்டஏழை ஜனங்களுக்கு அன்றைதினம் அன்னம் போடப்பட்டது. சாயந்திரம் லாட்ஜ் கட்டடத்தில் சமஸ்கிருத வித்வான் ஒருவர் பகவத்கீதை 12-வது அத்தியாயம்படித்து விவரித்துஉபந்நியசித்தார். ஆசியதீபம் என்னும் புத்த சரித்தத்தில் 8-வது அத்தியாயத்திலிருந்து கர்ம யோகத்தைப் பற்றிய பாகமும்படித்து விவரிக்கப்பட்டது. அன்று சகலமும் வெகு குதூஹலமாக நடந்தது.

பத்திரிகை வரவு.

கல்வி—ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை:—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் பி.ஏ, பி. எல், அவர்கள்பத்திராசிரியர். எஸ்.நாகராஜையரால் மதுரையில் பிரசுரம் செய்யப்படுகிறது. வருஷச்சந்தா ரூ. 1 மட்டும்.

தமிழுலகுக்குத் தலை நகரெனக் கூறுதற்குரிய மதுரைமாநகரில் புதிதாகக்கல்வியென்னும் பெயர்பூண்டு மாதாந்தரப் பத்திரிகையொன்று நாளிது வருஷம் சித்திரை மீ முதல் வெளிவருகிறது. அதன் முதலிரண்டு பகுதிகளைப் பார்த்தோம். ஜனங்களுக்கு இக,பர, சாதனங்களைப் பயக்கத்தக்கது அறிவே. தற்காலத்தில் உலகில் அறிவு பரவும்படி செய்யும்சாதனங்களில் முக்கியமானவை பத்திரிகைகள். ஆகையால் புதிதாக இப்பத்திரிகை தோன்றியதைப் பற்றி அறிவு பரவுதற்குப் புதியவொரு கால்வாய் ஏற்பட்டிருக்கிறதேயென்று நாம் அகமகிழ்ந்து நம் சகோதரிக்கு நல்வரவு கூறுகிறோம்.

கல்வி பரவவேண்டியது மிக்க அவசியம். இந்தியரில் எழுதப் படிக்கத் தெரியாதவர் கிடையாதென்று சொல்லும்படி பலரும் கல்வி கற்கவேண்டும். இந்தியரைவிட ஆழ்ந்த படிப்பில் மிகுந்தவர் கிடையாதென்று சொல்லும்படி யாவரும் நன்று அபிவிருத்தியடைய வேண்டும். இவ்விரண்டு நோக்கங்களும் கைகூடும்வண்ணம், உலகத்தில் பற்பல நாடுகளில் கையாளும் கல்வி முறைகளைப்பற்றி இப்பத்திரிகையில் விசாரிக்கலாம். கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு புதிதாகத் தோன்றும் யுக்திமுறைகளைக்காட்டி அதிகாரிகள் அவைகளை அங்கீகரிக்கும்படி செய்யலாம். ஜனங்கள் ஆங்காங்கு பள்ளிகளை ஸ்தாபிக்கும்படி தூண்டலாம். அன்பைக்கொண்டு மாணாக்கர்களுக்குக் கற்பித்தல்தான் பயன்தரத்தக்கதா அல்லது பயமுறுத்திக் கற்பித்தல் சரியா என்ற விஷயத்தைப்பற்றி விசாரித்து முன்னர்க் கூறியமுறையையே யாவரும் கையாளும்படி செய்யலாம். இந்தியாவின் பெருமைக்கும், ஞானத்துக்கும் ஏற்ற உயர் லக்ஷியம் கொண்டு, அவ்வுயர் லக்ஷியத்தை நாளடைவில் அடையும் வண்ணம் முயலலாம். இவ்விதமான வழியில் செய்யவேண்டிய முயற்சிகள் அதிகமிருக்கின்றன. இதரபத்திரிகைகளைப் போலவே கதை முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையிலும் வெளிவருவதுடன் மேற்கூறிய வித்யா முறைகளையும்பற்றி இப்பத்திரிகையில் வியாசங்கள் வரும் என்றும் எண்ணுகிறோம்.

முதலிரண்டு சஞ்சிகைகளில் இரட்டைப்பட்டங்கள் பூண்டிருபர்கள் பலர்விஷயதானங்கள் செய்திருக்கிறார்கள். இவர்களுடைய உதவியினாலும் பத்திராசிரியருடைய நன் முயற்சியினாலும் இப்பத்திரிகை தினேதினே அபிவிருத்தியடைந்து, தமிழுலகுக்குப் பேருதவி செய்யும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

புத்தக வரவு.

ராஜாங்கங்களுக்குள் சமாதானம் ஏற்படும்படி செய்வதற்கு அமெரிக்காவில் ஒரு ஸமாஜம் ஏற்பட்டுளது. அதற்கு இருப்பிடம் நியூயார்க்கு நகரம். அந்த ஸமாஜத்தார் உலகத்திலுள்ள பற்பல ராஜாங்கங்களுக்குள் பரஸ்பரம் உண்மையறிவு, அனுதாபம், மரியாதை இவைகளை உண்டாக்குவதற்காகவும், உலகத்தாருக்குள் சமாதானம் ஏற்பட்டு ஒற்றுமையாயிருக்கவேண்டுமென்ற பேரவாவும் நல்லெண்ணமும் உண்டாவதற்காகவும் சமயோசிதம் போல் ஆங்கிலத்தில் துண்டுப்புத்தகங்கள் பிரசுரம் செய்து உலகத்திலுள்ள முக்கியஸ்தர்கள், பத்திரிகைகள், சபைகள் எல்லோருக்கும் அப்புத்தகங்களை அனுப்பி வருகிறார்கள். அதன் அவசியம் என்னவென்றால், சகலரும் எதிராளியுடைய உண்மையான கக்ஷியைத் தெரிந்துகொண்டால் சண்டையை சீக்கிரம் முடிக்க இயலும். மத்தியஸ்தர்கள் இருதிறத்தாருடைய கக்ஷிகளையும் உள்ளபடி அறிந்தால் யார் சொல்வது சரி யார் சொல்வது தவறு என்று அறியவும் சாதகமாகும். உண்மையை அறியாதவர்கள் போடும் சண்டைதான் பிரமாதமாகிறது வழக்கம். ஆகையால் இச்சபையார் பிரகிருத யுத்தத்தில் சமாதானம் ஏற்படவேண்டுமென்று சில நாளைக்கு முன் ஜர்மனி தேசத்தாரால் துவக்கப்பட்ட பிரேரணையையும், அதற்கு பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் கொடுத்த உத்தரத்தையும், உபயதரப்பார்கள் தத்தம்சபைகளில் செய்த பிரசங்கங்களையும் ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். பிரகிருத யுத்தமானது, எதைப்பற்றி மூண்டது? இருதரப்பார்களுக்குள் வித்தியாசம் என்ன? என்று விசாரித்து ஒவ்வொரு ஜாதியாரும் துண்டு ராஜாங்கமாக சகல சுதந்தரங்களுடன் இருப்பதும் அவரவர்கள் தங்களுடைய சுபாவத்திற்கு ஏற்ப அபிவிருத்தியடைவதும் அப்படி இருப்பதற்கு சகல ராஜாங்கங்களும் உதவியாயிருப்பதும் நியாயமென்று இந்த யுத்தத்தின் தீர்மானமாகும் என்று ரைசன் என்ற பிராஞ்சுக்காரர் எழுதியிருக்கிற வியாசம் ஒன்று மற்றொரு புத்தகமாக பிரசுரிக்கப்பெற்றிருக்கிறது இவ்விரு புத்தகங்களையும் படிக்கமிகுந்த சந்தோஷமடைந்தோம். மேற்கூறிய சமாஜத்தாரால் பிரசுரமாகும் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து பரவச்செய்தால் மிகுந்த பிரயோஜனமுண்டு.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம் இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்னபிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைச் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ அ பை
விலை பாக்கெட் 1-க்கு ரூ	0—8—0
டசன் 1-க்கு ரூ	5—0—0

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

எங்களைப்பற்றி

என்ன சொல்லுகிறார்கள்?

ஆந்திரா, இந்த ஒளஷதாலயம் இந்தியாவில் மிகப்பெரியதென்றே சொல்லவேண்டும்.

திராவிடாபிமானி, இவர்களின் அபிவிர்த்திக்கு மருந்துகளின் சற்குணமே காரணம்.

பெண்கல்வி, அவர்களுடைய பொதுமையேதான் வியாபாரத்தை அதிகப் படுத்துகிறது. இப்பொழுது உலகெலாம் பரவுகிறது

ஞானபானு, இந்த ஔஷதாலயம், "பொதுமையுடையார் பூமியாள்வார்" என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

கலைமகள், இவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கும்போது அளவற்ற அற்புதமான மருந்துகள் வைத்திருக்கிறதாய் விளங்குகிறது அவர்களின் பிரசித்திக்கு மருந்தின் குணந்தான் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லுகிறோம்.

இவ்விதமாகவும் இன்னும் அதிகமாகவும் இந்தியாவிலுள்ள சுமார் 212 பத்திரிகைகள் புகழ்கின்றன. யாரைப்பற்றி யென்று நினைக்கிறீர்கள்?

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயத்தைப் பற்றியேதான்.

விபரமான கியாட்லாக்கை விரும்புவோர் விலாசத்தைத் தெரிவித்தால் இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹ ஒளஷதாலயம்.

45, மேலக்கோபுரவீதி, மதுரை.